விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 12 ஞாயிற்றுக்கிழமை (28.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 283

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டுகள் சிறை

## பெங்களூர் நீதிமன்றம் பரபரப்புத் தீர்ப்பு



(தமிழகம்)

சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் நேற்று சனிக்கிழமை பரபரப்புத் தீர்ப்பு வழங்கியது. இதன் தொடர்ச்சியாக அவர் பிணையில் வெளிவர முடியாது என்பதால் உடனடியாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

23 ஆம் பக்கம் பார்க்க

- 4 ஆண்டுகள் சிறை
- ரூபாய் 100 கோடி அபராதம்
- முதல்வர் பதவி, தேசியக் கொடி பறிப்பு
- ரூபாய் 66 கோடிக்கும் அதிகமாக சொத்துக்குவிப்பு
- பிணைமனுவுக்கும் வாய்ப்பில்லை
- 10 ஆண்டுகள் தேர்தல் தடை
- வழக்குத் தொடுத்தவர் சுப்பிரமணியசுவாமி
- ஜெயாவிற்கு நெஞ்சுவலி
- தமிழகத்தில் பெரும் கலவரம்
- ஜெயாவின் 32 நிறுவனங்கள் இலக்கு
- பல்லாயிரக்கணக்கில் குற்றப்பத்திரிகை
- 10 நீதிபதிகள் விசாரணை
- 18 ஆண்டுகளின் பின் தீர்ப்பு
- அடுத்த முதல்வர் ஓ.பன்னீர்ச்செல்வம்?



## ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிடம் படைத்தரப்பிற்கு எதிராக முறைப்பாடுகள்

(கிளிநொச்சி)

காணாமல்போனவர்களை கண்டறிவதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வுகள் கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் நேற்றைய தினம் நடைபெற்றுள்ள நிலையில் 39 சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அதிகளவான முறைப்பாடுகள் படையினருக்கும், கடற்படையினருக்கும் எதிரான முறைப்பாடுகளாக அமைந்துள்ளன.

மேலும் குறித்த அமர்வு இன்றைய தினமும் நடைபெறவுள்ளது. நேற்று சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் மாலை 5.30மணி வரையில் மேற்படி அமர்வு நடைபெற்றிருந்தது.

இதன்போது 2006ஆம் ஆண்டு தொடக்கம் கிளிநொச்சி மாவட்டத்தை மையப்படுத்தி போர் உச்சம் பெற்றிருந்த சமயம், மக்கள் எதற்காக இடம்பெயர்ந்தார்கள்? எனவும், 2009 ஆம் ஆண்டு போர் நிறைவடைந்ததன் பின்னர் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மக்கள் சென்றிருந்த சமயம் மக்களுடன்

23 ஆம் பக்கம் பார்க்க

## டிப்பர் சில்லில் நசியுண்டு ஆயுர்வேத வைத்தியர் மரணம்



(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் -டிப்பர் வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் யாழ் கே.கே.எஸ் வீதி முட்டாஸ் கடைச் சந்திக்கருகில் இடம்பெற்றது.

இதில் நல்லூர் கச்சேரி மருதனார் கோவிலடியைச் சேர்ந்த துரைராஜா கோபிநாத் (வயது-30) என்ற ஆயுர்வேத வைத்தியரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கே.கே.எஸ் வீதியாக யாழ்ப்பாணம் நோக்கி சென்ற மோட்டார்

24 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கான ஆதரவில் வீழ்ச்சி 7 நாடுகளே ஆதரவு என்கிறார் தயான்

(கொழும்பு)

சர்வதேசத்தில் இலங்கைக்கான ஆதரவு பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக சிரேஷ்ட ராஜதந்திரியும பிரான்ஸிற்கான முன்னாள் தூதுவருமான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 22 நாடுகள் ஆதரவளித்துள்ளதாக மேற கொள்ளப்படும் பிரசாரம் யதார்த்த மற்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் உள்நாட்டு ரீதியான விசாரணைப்பொறிமுறை மேற கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

23 ஆம் பக்கம் பார்க்க

## புலமைப்பரிசில் பெறுபேறுகள் வெளியாகின

(கொழும்பு)

இவ்வருடம் நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று நள்ளிரவு வெளியிடப்பட்டது.

பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk எனும் உத்தி

24 ஆம் பக்கம் பார்க்க

SISIL WORLD





இலங்கையில் முதன் முறையாக மூன்று வருட உத்திரவாதத்துடன் கூடிய
HP, SAMSUNG, LENOVO, ASUS
கணினிகள் இப்பொழுது எம்மிடமிருந்து!

- வட்டி இன்றிய கொடுப்பனவு
- விசேட விலைக் கழிவுகள்
- 3வருட உத்திரவாதம்

இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2242335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021 222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-8608)


## மாணவிகளை கேலி செய்த ஐந்து இளைஞர்கள் கைது

நோர்வூட் தோட்டப் பகுதிகளிலிருந்து பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவிகளை கேலி செய்த 5 இளைஞர்களை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நோர்வூட், அயரபி தோட்டத்தில் வசிக்கும் மேற்படி ஐந்து இளைஞர்களும் 19 மற்றும் 23 வயதுடையவர்கள் என்று பொலிஸார தெரிவித்தனர்.

வீதியில் நின்று கொண்டிருந்து, பாடசாலை மாணவிகள் செல்லும் போது அவர்களை வழி மறித்து கேலி செய்வதாக அவ்வீதியில் கடமையில் இருந்த நோர்வூட் போக்குவரத்து பொலிஸாரிடம் அம்மாணவிகள் முறைப்பாடு செய்ததை அடுத்தே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மேற்படி இளைஞர்களை கடும் எச்சரிக்கையின் பின்னர் விடுவித்ததாக நோர்வூட் பொலிஸ் பொறுப்பதிகாரி சிந்தக விஜேசிங்க தெரிவித்தார். (இ)

## உதவி திட்ட நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன் பேணும் அமைப்பினால் கல்விக்கான மாதாந்த உதவி திட்ட நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை யா/கோண்டாவில்/ சி.சி. த.க பாடசாலையில் மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

இந் நிகழ்வில் 20 மாணவர்களுக்கு மாதாந்தம் 1000/- வீதமும் ஒரு பாடசாலைக்கு மதிய உணவு வழங்கும் செயற்பாட்டை விரிவு படுத்துவதற்கு ரூபாய் 1000/- வழங்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. (செ-11)

## கண்ணீர் அஞ்சலி

### கணபதிப்பிள்ளை ஞானக்குமரன்

(வலி.கிழக்கு பிரதேச சபை கோப்பாய் உப அலுவலக ஊழியர்)



எமது வலி கிழக்கு பிரதேச சபை கோப்பாய் உப அலுவலக ஊழியர் அமரர் கணபதிப்பிள்ளை ஞானக்குமரன் அவர்களின் மரணச் செய்திகேட்டு துயருறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

வலி. கிழக்கு பிரதேச சபை
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், நலன்புரி சங்கம், புத்தூர்.

(7698)

## பெரிய கடையில் காணி விற்பனைக்கு

ஞானம்ஸ் Hotelக்கு அருகாமையில் B.M.C ஒழுங்கையில் இல.25/7 ல் மூன்றுபரப்பு 7.50 குளிகொண்ட காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8.00-மாலை 5 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
021 7903642

(7687)

## Training with Fixed Vacancies

யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச ரீதியில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் நிறுவனத்திற்கு பதவி வெற்றிடங்கள்.

பயிற்சியின் போது தகைமைக்கேற்ப கொடுப்பனவுகள் தீர்மானிக்கப்படும்.

பயிற்சியின் பின்னர் EPF, ETF உடன் 50,000க்கு மேல் பெறலாம்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தங்குமிடம்/ உணவு வசதி செய்து கொடுக்கப்படும்.

தகைமை:-G.C.E O/L, G.C.E A/L

அழைக்க:-021 4993166, 0774458134
Granton 225, 3-ம் குறுக்குத் தெரு, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(World visionக்கு அருகாமையில்)

(7694)

## விற்பனைக்கு

JK.XXXX, NISSAN SUNNY, FB 15 வெள்ளைநிறம், auto gear நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-0775073244

(7697)

## 2 மணித்தியாலத்தில் கணினி திருத்தம்

உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்


0779086737 Computer Repair

GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

### தங்கவேலாயுதம் தஞ்சுகன்

மருத்துவ பீட மாணவன்



| கண் மகிழ | மண் நெகிழ |
|---|---|
| 1990 | 2012 |
| - | - |
| 02 | 09 |
| - | - |
| 21 | 28 |

ஆண்டுகள் இரண்டு சென்றது
ஆறா வடுவாய்
எங்கள் உயிர் வலிக்கின்றதே
உன்னை நினைக்கையிலே
இழந்து விட்டோமே எங்கள்
மருத்துவ மாமேதையினை
என்றும் ஆறாதே எங்களது மனவேதனை
முன்னணி பெறுபேற்றுடன் பல்கலை தெரிவான
முன் உதாரணனே
சேவை முயற்சி இரண்டின் ரூபமாய் திகழ்ந்தவனே.
பல பல கனவுகள் உன்னைப் பற்றி பலர் கண்டிருக்க
அனைத்தையும் தகர்த்து அமைதியாகி விட்டவனே் தஞ்சுகனே

நிரந்தர விலாசம்:- சிவநகர்
7-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

தற்காலிக விலாசம்:-உக்குளாம்குளம்
நடுபாக்கம் வீதி, 357 வவுனியா.

தகவல்:-உன் அன்பு அம்மா,
தம்பி, தங்கைமார்.(உறவுகள்)
0772802296

(7693)

## ஆத்ம சாந்தி அழைப்பும் நன்றி நவிலலும்



| அகம் மகிழ | அகம் நெகிழ |
|---|---|
| 25 | 30 |
| - | - |
| 11 | 08 |
| - | - |
| 1944 | 2014 |

### அமரர் சோமசுந்தரம் விக்னேஸ்வரன்

(இணுவில் மேற்கு-சாலினி அரைக்கும் ஆலை & இண்டஸ்றி உரிமையாளர்)

30.08.2014 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து எமக்கு ஆறுதல் கூறி தேற்றியோருக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோருக்கும், இறுதிக்கிரியைகளின் போது பல்வேறு வகைகளிலும் உதவி ஒத்தாசை நல்கியோருக்கும், எமது இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் நாளை (29.09.2014) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**முக்கியகுறிப்பு:- எமது தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காதவர்கள் தயவுசெய்து இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தயவாக கேட்டுக் கொள்கின்றோம்.**

(7684)

கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்.

குடும்பத்தினர்.
தொ.பே:-021 2241 730

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டல் கருத்தரங்கு ஒக்டோபர் மாதம் யாழில்

இந்தியாவில் பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்புக்கு செல்ல விரும்பும் மாணவர்களுக்கு இந்தியக் கல்வி வழிகாட்டல் நிறுவனத்தால் (EdCIL) நடத்தப்படும் வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வடமாகாணத்திலுள்ள க.பொ.த. உயர்தர மாணவர்களின் நன்மை கருதி யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகமும் வடமாகாண கல்வி, விளையாட்டுத்துறை, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, இந்தியக் கல்வி வழிகாட்டல் நிறுவனத்துடன் இணைந்து இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது.

பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் தமது உயர்கல்வியை தொடர்வதற்காக உலகின் பல பாகங்களிலிருந்தும் வருடாந்தம் இந்தியாவிற்கு செல்கின்றனர். இலங்கை மாணவர்களும் கலாசார ரீதியில் ஒத்த தன்மை இருப்பதாலும் உலகத்தரக் கல்வியை மேற்குலகுடன் ஒப்பிடுகையில் குறைவான செலவில் பெற்றுக்கொள்ள முடிவதால் இந்தியாவை உயர்கல்வியைத் தொடர்வதற்கான விருப்பத்திற்குரிய இடமாகக் கருதுகின்றனர். இந்தியக் கல்வி வழிகாட்டல் நிறுவனமானது 2011 மற்றும் 2013 இல் யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக கல்விக் கண்காட்சியை நடத்தியுள்ளது.

இந்தியக் கல்வி வழிகாட்டல் நிறுவன அதிகாரிகள் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் தம்மோடு இணைந்துள்ள நிறுவனங்கள், இந்தியக் கல்வி முறைமை, இந்திய பல்கலைக்கழக மற்றும் நிறுவனங்களுக்கான தமது நிறுவனத்தின் ஊடான அனுமதி முறைமை பற்றிய தகவல்களை கருத்தரங்கில் பகிர்ந்துகொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# பண்பாட்டு மலருக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச கலாசார பேரவை, பண்பாட்டு மலர் வெளியிடத் தீர்மானித்துள்ளது.

இதில் பிரசுரிப்பதற்குரிய ஆக்கங்களை கீழ்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக வழங்கியுதவுமாறு வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச கலாசார பேரவைத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கமைய பிரதேச கல்வி பாரம்பரியம், கலை பண்பாட்டு வரலாற்று சுருக்கம், சமயம் சார்ந்த தொன்மையும் அவை சார்ந்த அடையாளங்களும் வரலாற்று முக்கியத்துவமான பண்பாட்டம்சங்கள், சுதேச மருத்துவம், சோதிடம், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், வட்டார சொற்கள், பழமொழிகள், விடுகதைகள், பிரதேசத்தின் பெருமைக்குரிய அறிஞர்களின் வரலாற்றுச் சுருக்கம், கூட்டுறவுத்துறை வளர்ச்சிப் போக்கும் வணிகமும், பிரதேச பாரம்பரிய கைத்தொழில் வளர்ச்சியும் அதன் சிறப்பு தேர்ச்சியும் ஊர் பெயர் விளக்கச் சுருக்கம், பாரம்பரிய விளையாட்டுக்களும் சாதனையாளர்களின் விபரமும், பிரதேசம் சார்ந்து வெளிவந்த கலை இலக்கிய சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்ற விடயங்களை உள்ளடக்கி அமைய வேண்டும்.

மேலும் ஆக்கங்கள் யாவும் வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) தொடர்பான தகவல்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

அத்துடன் இப்பிரதேசத்தை பிறப்பிடமாக அல்லது வசிப்பிடமாக கொண்டவர்களது ஆக்கங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆக்கங்கள் தொடர்பான தீர்மானம் மலர் குழுவிற்கே உரியது. எனவே ஆக்கங்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், கலாசார பேரவை, வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் மேலும் 021 225 5552 அல்லது 077 636 6099 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும் vswdscommunity@gmail.com எனும் மின்னஞ்சல் ஊடாகவும் தொடர்புகொள்ளும்படியும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532




# இராசி பலன்

28.09.2014
(புரட்டாதி 12, ஞாயிற்றுக்கிழமை)
சதுர்த்தி பிற்பகல் 2.09 மணிவரை
விசாகம் முன்னிரவு 10.38 மணிவரை
இராகுகாலம் -4.32-6.02 மணிவரை
சுபநேரம் - 9.02-10.32 மணிவரை
சதுர்த்தி விரதம்

வளவன்

**மேடம்** புகழ் கூடும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, விருப்பங்கள் கைகூடும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், பயணங்களால் அலைச்சல்கள் கூடும்.

**இடபம்** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் நல்லபடியாக அமையும், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மனதில் இனம் புரியாத சந்தோசங்கள் அதிகரிக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, தொலைபேசித் தகவல் மகிழ்ச்சிதரும்.

**கடகம்** புதிய பொறுப்புகள் வந்து சேரலாம், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், வாகன சுகமுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், ஆதாயம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, சகோதர ஒற்றுமை பலப்படும்.

**கன்னி** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வருமானம் திருப்திதரும், ரோக பயமுண்டு, தடைப்பட்ட காரியங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**துலாம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பயணத்தால் பலன் கிடைக்கும், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், சேமிப்பை உயர்த்த நடவடிக்கை எடுப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சயன சுகக் குறைவுண்டு.

**தனுசு** பெரிய மனிதர்களின் சந்திப்பு நன்மை தரும், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மகரம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், அதிர்ஷ்டகரமான நாள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள்.

**கும்பம்** பணப்புழக்கம் அதிகரிக்கும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் தாமதம் ஏற்படலாம், வீண் பழிகள் அகலும், பயணங்களால் பலனுண்டு, ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**மீனம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மனச் சோர்வுகள் கூடும், உடல் நலனில் கவனம் தேவை, அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் முதலீட்டாளர்களுக்கான விசேட கருத்தரங்கு யாழ்ப்பாணத்தில்

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சானது வடமாகாணத்தில் உள்ளூர் முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவிக்கும் நோக்கில் உள்ளூர் முதலீட்டாளர்களுக்கென ஏற்பாடு செய்துள்ள விசேட கருத்தரங்கு ஒன்று நாளை 29ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெறவுள்ள இந்த முதலீட்டாளர் கருத்தரங்கில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

வடமாகாணத்தை சார்ந்த உள்ளூர் முதலீட்டாளர்கள், தொழில் முயற்சியாளர்கள், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், அரச அதிகாரிகள் என பலரும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளவுள்ளதுடன் உள்ளூர் ஊடகவியலாளர்களும் இக்கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டுள்ளனர் என அமைச்சின் ஊடக ஒருங்கிணைப்பாளர் சுஜித் கொடிதுவக்கு அறிவித்துள்ளார். (இ)




## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூகநிலையத்தின் வாணிவிழா எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில் நால்வர் மணிமண்டபத்தில் சமயப் பொறுப்பாளர் மலர்விழி ஸ்ரீகந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (இ

## நிறைவு நாள் நிகழ்வு

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 3 ஆவது ஆண்டுநிறைவு நாள் விழாவும் அதன் சிறப்பு நிகழ்வுகளும் இன்று 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ

## கற்றல் நடவடிக்கை மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்காக மூடப்பட்டிருந்த உயர்தர வகுப்புக்களின் கற்றல் நடவடிக்கைகள் மீண்டும் நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகும் என மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (இ

# மாற்றுத் திறனாளிகளுக்கு நிதியுதவி

(கரணவாய்)

யாழ்கரவெட்டி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கு வடக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களம் ஊடான வீட்டுப்புனரமைப்புக்கு மற்றும் சுய தொழிலுக்கு நிதி கிடைத்துள்ளதாக கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ அறிவித்துள்ளார்.

இதில் மாற்றுத் திறனாளிகளான பயனாளிகளின் வீட்டினை புனரமைப்பு செய்வதற்காக (4 பயனாளிகளுக்கு) நிதியுதவி கிடைத்துள்ளது.

அதில் இரு பயனாளிகளுக்கு தலா 90 ஆயிரம் ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய இரு பயனாளிகளுக்கு தற்போது நிதி கிடைத்துள்ளதாக கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பகுதி அறிவித்துள்ளது.

இதற்கமைய கரவெட்டி மத்தி தச்சன் தோப்பு வீதியைச் சேர்ந்தவர்களான செல்வரட்ணம் சண்முகராஜ், இராஜகுலசிங்கம்– தங்கமலர் ஆகிய இரு பயனாளிகளே தெரிவு செய்யப்பட்டு வீட்டுப் புனரமைப்பிற்காக நிதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த இரு பயனாளிகளும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப்பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சுய தொழிலுக்கென 3 பயனாளிகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி ஆடு வளர்ப்புக்கு அல்வாய் தெற்கைச் சேர்ந்த கோபாலன் சிறிதரன், கோழி வளர்ப்புக்கு சமரபாகு, கேவில் வளவினைச் சேர்ந்த கந்தையா செல்வராசா மற்றும் ஆடு வளர்ப்புக்கு இமையாணன் மேற்கைச் சேர்ந்த சிங்கராசா உதயமலர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எனவே மேற்குறித்த 3 பயனாளிகளும் எதிர்வரும் 30 ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப்பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-60)


## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வண்ணை–சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்தி கழகமும் அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடத்தும் நவராத்திரி விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் சைவ சமய அபிவிருத்திக்கழக தலைவர் இரா.செல்வவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வண்ணை–சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய தலைவர் செ.சுப்பிரமணியம் கலந்து கொள்ளவுள்ளார். (இ





வடக்கு மாகாண சபை மற்றும் வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் உலக சுற்றுலாத்துறை தினத்தை முன்னிட்டு அபிவிருத்தி மாநாடு ஒன்று நேற்று யாழ்.ரில்கோ விடுதியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி உரை நிகழ்த்துவதையும் சுற்றுலாத்துறை தொடர்பான இறுவெட்டின் முதல் பிரதியை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் பெற்றுக் கொள்வதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:–என்.குமார்)




## பசுந்தோகை இதழ்-13 நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியத்தின் (2012/2013) பசுந்தோகை இதழ்–13 நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை விவசாய பீடத்தின் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி கலாநிதி சிவமதி சிவச்சந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (இ

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை நம்பி தமிழர் எதிர்காலத்தை இழந்துவிட்டனர்

## முன்னாள் எம்.பி.குகேந்திரன் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

மக்களது ஆதரவை எவர் ஒருவர் சுயநலமற்ற வகையில் மிக நெருக்கமாக பெற்றுக் கொள்கின்றாரோ அவர்தான் மக்களது உண்மையான பிரதிநிதியாக இருக்க முடியும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான கே.வி. குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

வேலணைப் பிரதேசத்திற்குட்பட்ட இளைஞர் ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வு வேலணைப் பிரதேச சபைத் தலைவர் எஸ். சிவராசா (போல்) தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலத்தில் தேசியவாதப் பேச்சுக்களைக் கூறி இளைஞர்களையும் யுவதிகளையும் தவறாகப் பயன்படுத்தியவர்கள் தமிழ்த் தேசியம் என்ற ஒன்றை வைத்துக் கொண்டு மக்களை அதலபாதாளத்துக்குள் தள்ளிவிட்டுள்ளனர். தமிழ் மக்களும் இந்தக் கூட்டமைப்பினரை நம்பி தமது ஒட்டு மொத்த எதிர்காலத்தையும் இன்று வரை இழந்து கொண்டிருக்கின்றனர்.

இளைஞர்கள் ஒவ்வொருவரும் தமது சமூகம் சார்ந்த விழிப்புணர்வும் தூர நோக்கும் கொண்டவர்களாக செயற்படுவார்களானால் எமது மக்களை எதிர்காலத்தில் ஆயுதக் கலாசாரமற்ற ஒரு புது யுகத்திற்கு கொண்டுசெல்ல முடியும்.

நாங்கள் ஒருபோதும் எமது கொள்கைகளையும் நோக்கங்களையும் கைவிட்டது கிடையாது. ஆயுதப் போரட்டத்தைக் கைவிட்ட நாளிலிருந்து மத்தியில் கூட்டாட்சியையும் மாநிலத்தில் சுயாட்சியையும் நேசித்து வரும் அமைச்சரது கொள்கைகளையே கூட்டமைப்பினரும் இன்று ஏற்கும் நிலைக்கு வந்துவிட்டனர்.

இதை முப்பது வருடங்களுக்கு முன்னர் ஏற்றிருந்தால் எமது இனம் கண்ட வரலாறு காணாத அழிவுகளை தடுத்து நிறுத்தியிருக்க முடியும்.

ஒவ்வொரு இளைஞனும் தனது குடும்பத்தை நேசிப்பது போல் தனது பிரதேசம் தனது நாட்டை நேசிப்பார்களானால் நிச்சயமாக எமது மக்களின் எதிர்காலத்தை வெளிச்சத்திற்கு கொண்டுவரமுடியும்.

இன்று உருவாகியுள்ள இளைஞர் அமைப்பால் இன்றைய அரசியலில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவந்து அடுத்த சந்ததிக்கு இணக்க அரசியல் மூலம் திடமான தீர்வையும் தன்னிறைவையும் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதுதான் எமது நோக்காகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசடியில் ஈடுபட்ட எண்மருக்கு இருபது வருடங்கள் கடூழிய சிறை

வரி மோசடியில் ஈடுபட்ட 8 குற்றவாளிகளுக்கு தலா 20 வருட சிறைத் தண்டனை விதித்து கொழு ம்பு மேல் நீதிமன்றம் நேற்று முன் தினம்தீர்ப்பளித்தது. 399 கோடி ரூபாய் வரி மோசடியில் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ள இந்த குற்றவாளி கள், 30 மில்லியன் ரூபாய் அபராதம் செலுத்த வேண் டும் என்றும் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க உத் தர விட்டார். இதேவேளை, குற் றவாளிகளின் சொத்து விபரங்கள் குறித்த அறிக்கையை நீ திம ன் றத் தில் சமர்ப் பிக் கும் படி இரகசிய பொலி ஸா ருக்கு உத்தர விட்ட நீதிபதி, அவர் களது சொத் துக் களை அரசுடைமையாக்கு மாறும் பணித்தார்.

குற்றவாளிகளாக இனங்கா ணப்பட்ட இந்த எட்டு பேரும், நீதமன்ற உத்தரவை மீறி வெளி நாடு சென் றுள்ள நிலையில் அவர்கள் நேற்று முன்தினம் மன்றில் ஆஜராகவில்லை. இந் நிலையில், இவர்கள் இன் றியே வழக்கின் தீர்ப்பு வழ ங்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (இ)

**யோகா பயிற்சியின் ஆரம்ப நிகழ்வு இன்று**

யாழ்.யோக அர ங்கத்தினர் நடத்தும் யோகா பயிற்சியின் அடுத்த புதிய பயிற் சி செயற்பாட்டு ஆரம்ப நிகழ்வுநல்லூர்த்தேரடி அருகேஅறுபத்துமூன்று நாயன்மார்குருபூசை மடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி தொட க்கம் 6 மணிவரை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து யோகா வகுப்புக்கள் தினமும் மாலை 6 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை 20 நாட்கள் நடை பெறும். இப்பயிற்சி நெறியைபூர்த்திசெய்ப வர்களுக்கு கையே டும் சான்றிதழும் வழங் கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அனைவரையும் இதில் இணைந்து பயன் பெறும் யோக அரங்கத்தினர் கேட்டுக் கொண்டு ள்ளனர். (இ)


## விற்பனைக்கு

NPHE XXXX எனும் இலக்கமுடைய பஜாஜ் Boxer மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு:- 077 9048404 (7690)

## வேலைவாய்ப்பு

உங்களின் கனவு எங்களின் பொறுப்பு. கல்வி தகைமை சிங்களம் அவசியமில்லை. பிரதான 195 தொழிற்சாலைகளில் 500 இற்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புக்கள். (உற்பத்தி/ லேபல்/ பொதியிடல்/ தரம்பிரித்தல்) வயது 18-50 ஆண்/ பெண் சம்பளம் 24000/= 35000/= வரை. விவாகமானவர், குழுக்கள், நண்பர்கள் ஒரே தொழிற்சாலைகளில் வருகை அன்றே வேலை. மேலதிக தகவல்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

முல்லைத்தீவு- 077 4430166 யாழ்ப்பாணம்- 077 1116770
கிளிநொச்சி-077 4567082 வவுனியா- 077 8304013 (கு-8563)

## நிரந்தர தொழில்வாய்ப்பு

உங்கள் கனவு நிரந்தர தொழிலை பெறுவதாய் உடனே இன்றே அழையுங்கள் 17-50 வயது ஆண்,பெண் கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜேம்/கோடியல் /பிஸ்கட்/ சொக்லெட்/ டொபி/ பால்மா/ ஸ்டிக்கர் /printing .... போன்றவற்றில் உற்பத்தி லேபல் பொதியிடல் தரம் பிரித்தல் களஞ்சிய பிரிவிற்கு உடனடியாக ஆட்கள் தேவை. சம்பளம் 18000=, 25000/=, 35000-= உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில் வருகை அன்றே வேலை (நண்பர்கள்,குழுக்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்) மேலதிக தகவல்களுக்கு

வவுனியா-0771116770 யாழ்-மட்டக்களப்பு- 0776838231
அம்பாறை -0775561880 திருகோணமலை 0776389725 (கு-8598)

## வேலைவாய்ப்பு

கல்வி அறிவு சிங்களம் அவசியம் இல்லை. சாப்பாடு தங்குமிடம் குறைந்த விலைகளில். சம்பளம் 18000/=,28000/=,32000/= கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/ டொபி/ பிஸ்கட்/ காகில்ஸ்/printing/ stores/ அலுமினியம்/நூடில்ஸ் போன்றவற்றில் உற்பத்தி லேபல் பொதியிடல் களஞ்சிய பிரிவுகளுக்கு 17-52 வயது ஆண், பெண் தேவை. (நண்பர்கள், குழுவினர், தம்பதியினர்ஒரே தொழிற்சாலையில்) வருகை அன்றே வேலை.

தொடர்புக்கு- 077 8430179 (கு-8614)


## மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை



ஈழத்து சிதம்பரம்
(திண்ணபுரம் சிவன் கோவில்)
காரைநகர்

வருடாந்த
பொதுக்கூட்டஅறிவித்தல்

மேற்படி பொதுக்கூட்டம் எதிர்வரும் 12.10.2014 ஞாயிறு காலை 9.30 மணிக்கு மாணிக்கவாசகர் மடாலய மண்டபத்தில் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளு மாறு அன்போடு அழைக்கின்றோம்.

ஆதீனகர்த்தர்கள்
ஆ.அம்பலவிமுருகன்,
மு.சுந்தரலிங்கம்.
ஈழத்து சிதம்பரம்
காரைநகர்.

கல்விக்காருண்யன்
லயன்E.S.Pநாகரத்தினம்
(P.M.J.F)

அ.நா.பாலகிருஸ்ணன்
செயலாளர். (7692)

## சோ.ப.75 (சோ.பத்மநாதன்)



### பவள விழா வாழ்த்து

புதிய உயர் கல்லூரியில் நிகழ்ந்த நாளன்று வழங் கியது (28.09.2014)

மா பெரும் கவிஞனே
மா ஞானமும் போற்றுமே!
மா பெரும் ஆங்கில ஆசானே
மா நிலமும் நிதம் வாழ்த்துமே!
நீடு பெரும் வாழ்வும் நிலைஞானம்
பேடு நீங்கவே என்றும் வாழ்கவே!
ஆசி பல உங்களிடம் வேண்டுவோமே
விழித்து நீங்கள் வாழ்த்துங்களே!

என்றும் தங்கள் அன்பு வாழ்த்து வேண்டும் மாணவன்
சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள்.
(B.A.Dipin Ed.M.A)பிரதி அதிபர்,
யா/ அம்பன். அ.மி.த.க.பாடசாலை
ஆதீன ஹர்த்தா, நெல்லண்டைப் பத்திரகாளியம்மன், ஸ்ரீ வீரமாகாளியம்மன்,
வட பத்திரகாளியம்மன், தும்பளை, பருத்தித்துறை. (சி-8603)


## அழகுக் கலைப் பயிற்சி நிலையம்



அழகுக்கலை ஆலோசகர்கள் ,அழகுக்கலை சுயாதீன முகாமையாளர்களை உருவாக்கிய சுவீடன் நாட்டு நிறுவனத்தின் யாழ், சேவை நிலையத்தினால் மிக குறைந்த கட்டணத்தில்.....
துரித 1 மாத கால அழகுகலை பயிற்சிகள்
டிப்ளோமா அழகு கலைபயிற்சிகள்
கேக் ஐசிங் பயிற்சிகள் அனைத்தும் மிக குறைந்த கட்டணத்தில் ஆரம்பமாகவுள்ளன.
அனைத்து பயிற்சிகளும் கூடுதலான செய்முறை விளக்கத்துடன் இடம் பெற்று ஒவ்வொரு மாணவர் மீதும் தனித்தனியாக கவனம் செலுத்தப்பட்டு பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்.
பிரிவு 1:01/10/2014 அன்று 10.30 மணிக்கு பிரிவு2:04/10/2014 அன்று 10.30 மணிக்கு
இணைய விரும்புவோர் அலுவலக நேரத்தில் மேலதிக விபரங்களை பெற்று பதிவுகளை மேற்கொள்ளவும்.
skin type testers மூலம் சருமம் பரிசோதிக்கப்பட்டு பருக்கள்,கரும்புள்ளிகள் மற்றும் கண் கருவளையங்கள்,முடி உதிர்வு,பொடுகு,பித்தவெடிப்பு ,உடல் பருமன் கூட்டுதல்,குறைத்தல் போன்ற பல வகையான அழகு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படும்.



(7688)

ஒறிபிலேம்
61B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (வேம்படி சந்தியில்)
தொடர்புகளுக்கு:- 0772288243/ 0214548028


Consulate General of India
Jaffna

edCIL

Ministry of Education
Northern Provincial Council

## இந்தியாவில் உயர்கல்வி

உயர்தரமான கல்வி வாய்ப்புக்களின் உறைவிடம்
**EdCIL (India) Limited**
[A Government of India Enterprise]
ISO 9001:2008 & 14001:2004
(Under Ministry of Human Resource Development, Government of India)

கல்வியாண்டு 2014-2015 இற்கான
பட்ட மற்றும் பட்ட மேற்படிப்பு கற்கைநெறிகள் தொடர்பாகவும்
இந்தியாவில் உயர்கல்வி தொடர்பாகவும்
இந்திய அரசின் கல்வி ஆலோசகர்களான EdCIL நிபுணர்கள்
நடாத்தும்

### "இந்தியாவில் உயர்கல்விக்கான ஆலோசனையும் வழிகாட்டலும்"

எனும் கருத்தரங்கில் கலந்து பயன்பெறுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இடம் : யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
காலம் : 01 ஒக்ரோபர், 2014, மு.ப.10:00 –பி.ப.13:00

மேலதிக தகவல்கள் மற்றும் தொடர்புகளுக்கு:

**Dr. Shaik Suleman**
Head (Placement & Secondment Division)
EdCIL (India) Limited

Phone: 0091-120-2515281 (D); 2512001-006
Email: placement@edcil.co.in / ssuleman@edcil.co.in
Website: www.edcilindia.co.in

## கல்யாண மாலை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 37 3/4 செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: A/L/ நூலக உதவியாளர்<br>தொ.இ: B/3677 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 59 சூரிசெவ் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: MSC<br>தொ.இ: G/3662 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 5 1/2 செவ் 2<br>ல்உயரம்: 5'11"தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/3681 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: 37 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ வங்கி உத்தியோகத்தர்<br>தொ.இ: G/3664 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 36<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSC/ பொறியியலாளர்<br>தொ.இ: B/3683 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மிருகசிரீடம் 3<br>கி.பா: 33 செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC/ தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: பெண் விசாகரத்து பெற்றவர். <br>தொ.இ: G/3665 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 81 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/3684 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 32 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/3672 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் விவகாரம்

## நவாஸ் ஷெரிப்பின் பேச்சுக்கு இந்தியா கடும் கண்டனம்



அமெரிக்காவில் நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா.பொது சபை கூட்டத்தில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் கலந்து கொண்டு பேசினார். அப்போது மீண்டும் காஷ்மீர் பிரச்சினையை கிளப்பினார். கவனத்தை ஈர்க்க முடியாத வகையில் காஷ்மீர் பிரச்சினை மூடி மறைக்கப்பட்டுள்ளது என்றார் நவாஸ் ஷெரிப்.

நவாஸ் ஷெரிப்பின் இந்த பேச்சுக்கு இந்தியா கடும் எதிர்ப்பும் மறுப்பும் தெரிவித்துள்ளது. ஐ.நா. சபை கூட்டத்தில் மத்திய அரசின் முதன்மை செயலாளர் அபிஷேக்சிங் இது தொடர்பில் கூறுகையில்,

ஜம்மு காஷ்மீர் மக்கள் அமைதியான சூழ்நிலையில் உள்ளனர். உலக நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ள ஜனநாயக கொள்கைகள் மற்றும் நடை முறைகளுடன் கூடிய ஆளுமையை தொடர்ந்து ஏற்றுக் கொண்டுள்ளனர்.

எனவே பாகிஸ்தான் பிரதிநிதியின் (நவாஸ் ஷெரிப்) காஷ்மீர் பற்றிய பேச்சு ஏற்க தக்கதல்ல என்பதால் அதை நாங்கள் நிராகரிக்கிறோம் என்றார். (இ)

# சுவாமி வீடு மீது கல்வீச்சு தாக்கு; கருணாநிதி கொடும்பாவி எரிப்பு

## அ.தி.மு.க.தொண்டர்கள்

சொத்து குவிப்பு வழக்கில் முதலமைச்சர் ஜெயலலிதா குற்றவாளி என்று தீர்ப்பு அறிவிக்கப்பட்டவுடன் ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் திரண்டிருந்த தொண்டர்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர்.

அவர்கள் திடீரென போராட்டத்தில் குதித்தனர். தி.மு.க. தலைவர் கருணாநிதியின் கொடும்பாவியை ஆட்டோவில் தயாராக வைத்திருந்தனர். அதனை அ.தி.மு.கவினர் வீதியில் போட்டு தீ வைத்து எரித்தனர்.

அப்போது கருணாநிதிக்கு எதிரான கோஷங்களையும் அவர்கள் எழுப்பினர்.

இதன் காரணமாக அப் பகுதியில் இருந்த கடைகளும் அடைக்கப்பட்டன. கட்சி அலுவலகம் மற்றும் அதனை சுற்றியிருந்த பகுதிகளில் பெரும் பரபரப்பு நிலவியது.

ஜெயலலிதாவுக்கு எதிரான தீர்ப்பு வெளிவந்தவுடன் அ.தி.மு.கவினர் ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக திரண்டனர். பெரும்பாலான இடங்களில் கல்வீச்சு சம்பவங்களும் நடைபெற்றன. தாம்பரம் எம்.ஆர்.எம்.தெரு பகுதியில் ஒரு கும்பல் கடைகள் மீது சரமாரியாக கற்களை வீசி தாக்குதல் நடத்தியது.

மயிலாப்பூர், சாந்தோம் பகுதியில் உள்ள சுப்பிரமணிய சுவாமியின் வீடு மீதும் கல் வீசப்பட்டது.

அம்பத்தூர், வில்லி வாக்கம் ஆகிய இடங்களில் கருணாநிதி, சுபபிரமணியசாமி உருவ பொம்மை களை அ.தி.மு.கவினர் எரித்தனர். (இ)

## மாணவனை துஷ்பிரயோகம் செய்த அதிபருக்கு விளக்கமறியல்

தலைமன்னார் கட்டுக்காரன் குடியிருப்பு பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் 11 வயது மாணவனை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய பாடசாலையின் அதிபரை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் நேற்று முன்தினம் உத்தரவிட்டார். கடந்த 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த அதிபர் பாடசாலையின் களஞ்சிய அறைக்குள் அழைத்துச் சென்று குறித்த மாணவனின் சீருடையை களைந்து துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பெற்றோரிடம் சிறுவன் தெரிவித்ததையடுத்து, பெற்றோர் தலைமன்னார் பொலிஸாரிடம் முறையிட்டனர். இந்நிலையில் குறித்த சிறுவனை கடந்த 25 ஆம் திகதி வியாழக்கி ழமை மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். இத னையடுத்து, குறித்த பாடசாலையின் அதிபரை தலைமன்னார் பொலி ஸார் கைது செய்து நேற்றுமுன்தினம் மன்னார் நீதிமன் றத்தில் ஆஜர் படுத்தினர். இதன் போதே மேற்படி உத்தரவினை நீதவான் பிறப்பித்தார். (2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 80 |
| தக்காளி | 50 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 50 | 50 |
| கோவா | 40 | 80 | 80 |
| கரட் | 80 | 70 | 100 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 40 | 80 | 60 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 50-100 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 140 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 90 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 60 | 120 | 100 |
| லீக்ஸ் | 140 | 90 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 60 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 60 | 60 | 80 |
| போஞ்சி | 160 | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | 30 | 70 | 50 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 140 | 160 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30-35 |
| இராசவள்ளி | 140 | 100 | 120 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 149

லக்ஷி லக்ஷி




துஷா துஷா



நிஷா விஷாகா



டோறின் மன்மதநாயகம்




சிந்து பைரவி




றிச்சாட் ஜெயபாலன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40 அடி ஆழத்தில் அமைக்கப்பட்ட குழாய்க்கிணற்று நீர் உயரமாக மேலெழுந்து வெளியேற்றம்



(மல்லாவி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் வறட்சியை நீக்கும் முகமாக 36 குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கோணாவில் பகுதியிலுள்ள காந்தி கிராமத்தின் கரிகாலன் முன்பள்ளி வளாகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் 40 அடி ஆழத்தில் அமைக்கப்பட்ட குழாய்க் கிணற்றிலிருந்து தரை பகுதிக்கு மேலாக அதிகளவு உயரமாக தண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது.

இவ் அதிசய சம்பவத்தை பெருந்திரளான மக்கள் வந்து பார்வையிட்டுச் சென்றனர்.

இக்குழாய்க்கிணறு, இலங்கை நீர்வளச் சபையினால் நீர்நிலைகள் துல்லியமான முறையில் கண்டு பிடிக்கப்பட்டு கணிக்கப்பட்டு குழாய்க் கிணறு அடிக்கப்பட்ட நிலையில் இவ் அதிசய நீர் வெளியேற்றம் இடம்பெற்றுள்ளது.

அத்துடன் இக்கிராமத்தின் ஏனைய நீர் நிலைகள் வறண்டு போன நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கிளிநொச்சி மாவட்ட பிரதி பணிப்பாளர் அருணாசலம் விஜயகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (2-15-27)

## மரக்கிளை முறிந்து விழுந்து பொலிஸ் நிலைய கட்டடம் சேதம்

### மூவர் காயம்



(குருமன்காடு)

வவுனியா பொலிஸ் நிலையத்திலுள்ள மரம் ஒன்றின் கிளை முறிந்து விழுந்ததில் பொலிஸ் நிலைய கட்டடம் சேதமடைந்துள்ளதுடன் மூன்று பொலிஸார் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

வவுனியாவில் நேற்று முன்தினம் மாலை பெய்த கடும் மழையின் போது பொலிஸ் நிலைய வளவினுள் நின்ற பெரிய மரம் ஒன்றின் கிளை முறிந்து பொலிஸ் நிலைய கட்டடத்தின் மீது விழுந்துள்ளது.

இதனால் அக் கட்டடத்தில் இயங்கி வந்த சிறுகுற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவின் கூரைப் பகுதி சேதமடைந்துள்ளது. இதன்போது அப்பிரிவில் கடமையில் இருந்த மூன்று பொலிஸார் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

மாலை வேளை இச்சம்பவம் இடம்பெற்றதால் பொலிஸ் நிலையத்தின் குறித்த பகுதியில் அதிகளவானோர் நிற்கவில்லை. இதனால் பெரியளவில் உயிர்ச்சேதங்கள் ஏற்படாமல் தடுக்கப்பட்டுள்ளது. (2-250)

## கிளிநொச்சி கிராம மக்களுக்கு உருளைக்கிழங்கு விநியோகம்

(கிளிநொச்சி)

நாட்டில் அண்மைக்காலமாக ஏற்பட்ட வரட்சியை அடுத்து வரட்சி நிவாரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிராம மக்களுக்கு உருளைக்கிழங்குகள் வழங்கப்பட்டு வருகிறது.

அரசாங்கத்தினால் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டு அவை அந்தந்த கிராம அலுவலர்களின் மூலம் ஒரு குடும்பப்பதிவு அட்டைக்கு 5 கிலோ கிராம் வீதம் வழங்கப்படுகிறது.

இதற்கமைய நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சிவநகர் கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும்அனைத்து குடும்பங்களுக்கும் 5 கிலோகிராம் உருளைக்கிழங்குகள் வழங்கப்பட்டுள்ளது. (2-254)




## அனர்த்த முகாமைத்துவ ஒத்திகை பயிற்சி

(மல்லாவி)

வேள்ட்விசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவின் நெறிப்படுத்தலுடன் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவும், கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவும் இணைந்து இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் அனர்த்த வெளியீட்டல் தொடர்பான ஒத்திகை நிகழ்ச்சி பயிற்சி பட்டறை ஒன்றினை யாழ்ப்பாணம் சுண்டிக்குளம் நேசர்பாக் விடுமுறை விடுதியில் நடத்தவுள்ளது.

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் வேள்ட்விசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சி திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன் ஓர் அங்கமாக ஏற்கனவே உருவாக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் அதனோடு தொடர்புடைய அரச திணைக்கள பிரதிநிதிகளுக்கும் இவ் அனர்த்த ஒத்திகை பயிற்சி தொடர்பான பயிற்சி பட்டறையொன்று நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சியில் பங்கேற் பவர்கள் தமக்கான பிரதேசங்களில் இதனை வெளிப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் மக்கள் அனர்த்தம் தொடர்பில் அவதானமாக இருக்கமுடியும் என தெரிவிக்கப்படுகிறது.

இப்பயிற்சியானது ஒத்திகை என்பதால் யாழ்ப்பாணம் சுண்டிக்குள பகுதி மக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லையென கிளிநொச்சி மாவட்ட அனர்த்தமுகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கு.சுகுணதாஸ் அறி வித்துள்ளார். (2-15)

## காணியை மீள ஒப்படைக்குமாறு பொழுதுபோக்கு கழகம் கடிதம்

வவுனியா நகரசபைக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்ட காணியை உடன் மீள ஒப்படைக்குமாறு வவுனியா பொழுதுபோக்கு கழகம் கடித மூலம் கோரியுள்ளது.

அங்காடி வியாபாரிகளின் நலன் கருதி கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் நகர சபையுடன் ஒப்பந்தமொன்றினை மேற்கொண்டு பொழுதுபோக்கு கழகமானது தனது கழகத்தின் காணியில் ஒரு பகுதியை நகரசபைக்கு வழங்கியிருந்தது.

எனினும் தற்போது அக் காணியில் ஒப்பந்தத்தை மீறி நகரசபை செயற்படுவதாக தெரிவித்து மீண்டும் அக் காணியை மீள ஒப்படைக்குமாறு அக் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந் நிலையில் அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


வவுனியா நகரசபை பாவனைக்காக தங்களிடம் தற்காலிகமாக ஒப்படைக்கப் பட்ட எமது விளையாட்டு மைதானக் காணியை எமது விளையாட்டுக்கழகத்தின் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக மீண்டும் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலும் தாங்கள் செய்த ஒப்பந்தத்தின்படி அக்காணிக்கான நிலகுத்தகை கடந்த இரண்டு ஆண்டுகளாக செலுத்தப்படவில்லை என்பதனையும் அத்துடன் எங்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி நிரந்தர கட்டடங்கள் எதுவும் அமைக் கக்கூடாது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.


மேலும் எமது காணியானது பாதை ஓர வியாபாரிகளின் அசௌகரியங்களை தடுத்து வவுனியா நகரமக்களின் அசௌகரியங்களை குறைக்கும் நல்லெண்ண நோக்கத்திற்காகவே அப்போது கடமையாற்றிய செயலாளர், தலைவர் ஆகியோரின் வேண்டு கோளுக்கமைய தற்காலிகமாக ஒப்பந்தம் செய்து வழங்கப்பட்டது. ஆயினும் எங்களுடைய அனுமதியின்றி நோக்கத்திற்கு மாறாக பல வேலைத்திட்டங்கள் (மீன்சந்தை அமைத்தல் போன்ற செயற்பாடுகள்) மேற்கொள்வதை காணக்கூடியதாகவுள்ளது. எனவே தாங்கள் சுயமாகவே எமது ஒப்பந்தத்தை மீறியதாக கருதுகின்றோம் இதனால் எமது கழக அங்கத்தவர்களும் நிர்வாக உறுப்பினர்களும் தங்கள் மீதும் நடவடிக்கைகள் மீதும் மிகவும் அதிருப்தி அடைந்துள்ளார்கள். எனவே உடனடியாக மீன்சந்தை நடவடிக்கைகளை நிறுத்தி காணியை மீள எமது நிர்வாகத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரப் பகுதியிலுள்ள சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு முன்பாகவுள்ள அங்காடி வியாபார நிலையப் பகுதியில் மீன் சந்தையினை அமைப்பதற்கு வவுனியா நகரசபை வேலைகளை ஆரம்பித்துள்ளது. அக் காணியானது வவுனியா பொழுது போக்குக் கழகத்திற்குரிய காணியாகும்.

எனவே பொழுதுபோக்கு கழகத்தின் அனுமதி இல்லாது இம் மீன் சந்தை அமைக்கப்பட்டு வருகிறது. இந்நடவடிக்கை தொடர்பாக பல்வேறு சமூக அமைப்புக்கள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளன.

இதனையடுத்தே வவுனியா பொழுதுபோக்கு கழகம் கடிதம் மூலம் வவுனியா நகரசபையிடமிருந்து காணியை தருமாறு கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)





இலங்கை இந்து பேரவையின் நிதியுதவியுடன் வன்னி குறோஸ் சுகாதார நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 100 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கான பாடசாலை உபகரணத் தொகுதிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது...

## வவுனியா பிரதேச செயலகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ள போட்டிகள்

(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலகம் சிறுவர்,முதியோர்,விசேட தேவையுடையோர்களுக்கான தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே கவிதை,கட்டுரை, பேச்சு,சித்திர போட்டிகளை நடத்தவுள்ளது. இப்போட்டிகளில் வவுனியா பிரதேச செயலக பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களே பங்குபற்ற முடியும்.

இப்போட்டிகளில் தரம் ஒன்று முதல் தரம் மூன்று வரையான மாணவர்களுக்கு சிறுவர்களாகிய எம்மை பாசத்துடன் பாதுகாருங்கள் என்ற தலைப்பில் குழுப்பாடலும் தரம் 4 முதல் தரம் 5 வரையான மாணவர்களுக்கு முதியோர் எவரையும் புறம் ஒதுக்காமல் யாவருக்குமானதோர் சமூகத்தை கட்டியெழுப்புவோம் எனும் தலைப்பில் சித்திரமும் சிறுவர்களாகிய எம்மை பாசத்துடன் பாதுகாருங்கள் எனும் தலைப்பில் பேச்சுப் போட்டியும் தரம் 6முதல் தரம் 8 வரையான மாணவர்களுக்கு மகனே/ மகளே எமது எதிர்காலம் நீயே! எனும் தலைப்பில் கவிதை ஆக்கமும், பேச்சு போட்டியிலும் பங்கு பற்றலாம்.

தரம் 9 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கு விசேட தேவையுடையோருக்கான நிலைத்த அபிவிருத்திக்கான சிறந்த தளத்தினை தொழில்நுட்பத்தின் ஊடாக வழங்குதல் எனும் தலைப்பில் கட்டுரை போட்டியும் முதியோர் எவரையும் புறம் ஒதுக்காமல் யாவருக்குமானதோர் சமூகத்தை கட்டியெழுப்புவோம் எனும் தலைப்பில் பேச்சு போட்டியும் தரம் 12 முதல் 13 வரையான மாணவர்களுக்கு சிறுவர் தொடர்பான விடயதானத்துடன் விநாடிவினா போட்டியும் எம்மை நாமே பாதுகாப்போம் எனும் தலைப்பில் கவிதை ஆக்கப் போட்டியும் இடம்பெறும்

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6,7 ஆம் திகதிகளில் பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பிரதேச மட்டத்தில் போட்டி நிகழ்த்தப்பட்டு முதல் மூன்று இடங்களில் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள்,சான்றிதழ்கள் வழங்கப்படும். முதலாம் இடம் பெற்ற மாணவர்களின் நிகழ்வுகள் அனைத்தும் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் சிறுவர் முதியோர் விசேட தேவையுடையோர் தின நிகழ்வில்மேடையேற்றப்படும். (2-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரண்மனை சினிமாவிமர்சனம்




தமிழ் சினிமாவுக்குப் பழக்கமான "ஆயிரம் ஜென்மத்துப் பேய், இந்த முறை "அரண்மனை'யில் பயமுறுத்துகிறது!

பழைய அரண்மனையை விற்க சித்ரா லட்சுமணன், கோவை சரளா, மனோபாலா, வினய், ஆண்டரியா, ராய் லட்சுமி, சந்தானம்... என உறவினர்கள் ஒன்றுகூடுகிறார்கள். ஆனால், அரண்மனையை விற்க முடியாமல் ஏகப்பட்ட தடங்கல்கள். விருந்தாளி சுந்தர்.சி அதற்கான காரணத்தைத் தேடிப்போனால்... பேய் ஃப்ளாஷ்பேக். அப்புறம் என்ன... அப்பாவி, கொலை, அம்மன், கிரகணம், "இரவுக்குள் கணவன்-மனைவி சேரக் கூடாது என, பேய் பார்முலா சினிமா!

பேய் படமாக ஆரம்பித்து காமெடி படமாக மாறி, சாமி படமாக முடிக்கிறார்கள். "ஆயிரம் ஜென்மங்கள்', "சந்திரமுகி, "முனி என படம் முழுக்க பரண் தூசி!

ஒரு ஹீரோயினுக்கே ஸ்கோப் இருக்காது தமிழ் சினிமாவில். ஆனால், ராய் லட்சுமியின் கிளாமர் பேக்கேஜோடு ஆரம்பிக்கும் படம், ஹன்சிகா ஃப்ளாஷ்பேக்கில் பயம் காட்டி, ஆண்ட்ரியா ஆவேசத்தில் முடியும் விதத்தில் அனைவருக்கும் சரிவிகித முக்கியத்துவம்.

மறக்காமல்மூவரும்துண்டு கட்டிக் குளிக்கிறார்கள். வாவ்..!

கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவதும் வில்லன்களிடம் கெஞ்சுவதுமாக ஹன்சிகா ஓ.கே ஓ.கே.. தலை கவிழ்ந்து, முகம் மறைத்து உறுமுவதும, கவிழ்ந்துகிடக்கும் காரில் குத்தவைத்து அமர்ந்து மிரட்டுவதுமாக... அதட்டுகிறார் ஆண்ட்ரியா. "பேய், பயம் காட்டுகிறதோ இல்லையோ, நான் காட்டுகிறேன்' என "காத்தாட' உடைகளில் அழகு காட்டிக்கொண்டே இருக்கிறார் ராய் லட்சுமி.

வழக்கம்போல அலட்டிக் கொள்ளாமல் சுந்தர்.சி., "என்னமோ கூப்பிட்டாங்க... எதுக்கோ வந்தேன்' என வந்து போகிறார் வினய். இவர்களுக்கு இடையில் மொத்தப் படத்தையும் குத்தகைக்கு எடுத்துக்கொள்கிறது, சந்தானம் - கோவை சரளா - மனோபாலா கூட்டணி. பேய்க்கு பால் கொடுக்கச் செல்லும் சரளாவின் "பயந்து வருது' பதற்றத்துக்கு படா அப்ளாஸ். தலையில் அடிபட்டு 25 வருடங்களுக்குப் பின்னால் ரீவைண்டு ஆகிவிடும் மனோபாலாவின் அலப்பறைகளும், அதற்கு "முன்னாள் மனைவி, இந்நாள் காதலி' கோவை சரளாவின் புலம்பல் கவுன்ட்டர்களும் அட்ராசிட்டி!

"என் பாட்டி உழைப்பு எல்லாம் வீணாப் போயிருச்சே', "பழைய பிளேடை வெச்சு பைல்ஸ் ஆபரேஷன் பண்ணமாதிரி ஓடுறான்', "முருங்கைக்காய் சாப்பிட்டாதான் முறுக்கேறும்பாங்க... இங்க முருங்கைக்காய்க்கே முறுக்கேறிக்கிடக்குது', "பேயைப் பார்த்தா செவுள்லயே அடிப்பேன்' என அள்ளு கிளப்புகிறார் சந்தானம். படத்தின் "ஸோ கால்டு ஹீரோ'க்களைவிடவும் அழகா இருக்கீங்களே !

"பேயே லாஜிக் கிடையாது. பேய்க்கு எதற்கு லாஜிக்?' என நினைத்துவிட்டார்கள். பேய்க்கு திகில் கிளப்பும் உருவமும் இல்லை. திரைக்கதையில் பேய் பயத்துக்கான உதறலும் இல்லை!

பரத்வாஜ் இசையில் "பெட்ரோமாக்ஸ் லைட்டேதான் வேணுமா?' பாடல் மட்டும் ஹம்மிங் ரகம். பின்னணி இசையில் திகில் கிளப்புகிறார் கார்த்திக் ராஜா.

"பயப்படலாம்' எனப் போனால், சிரிக்கவைத்து அனுப்புகிறார்கள்!

# கோயில் வேண்டாம் அன்பு ஒன்றே போதும்




தமிழ் ரசிகர்கள் தரும் அன்பே போதும். எனக்காக யாரும் கோயில கட்ட வேண்டாம் என்று கூறியுள்ளார் நடிகை நயன்தாரா. நடிகைகளுக்கு கோயில் கட்டி, உலகையே வியக்க வைத்தவர்கள் தமிழ் சினிமா ரசிகர்கள். அப்படி ஒரு பாக்கியத்தை முதலில் பெற்றவர் குஷ்பு.

அந்தக் கோவிலில் வெள்ளிக்கிழமை தோறும் பூசாரியை வைத்து பூஜை அர்சனை வழிபாடுகளும் நடத்தப்பட்டன. அடுத்து நக்மாவுக்கும் கோவில் கட்டினர். பாட்ஷா வெளியாகி, நக்மா பெரிய ரேஞ்சில் இருந்த நேரம் அது. அது நமீதாவுக்கும் கோயில் கட்டுவதாக செய்தி வெளியானது. இப்போது நயன்தாராவுக்கு கோவில் கட்ட தற்போது ஏற்பாடுகள் நடக்கிறது.

தமிழகம் முழுவதும் உள்ள நயன்தாரா ரசிகர்கள் இணைந்து இக்கோவிலை கட்டப் போகிறார்களாம். இதற்கான இடத்தை தேர்வு செய்யும் முயற்சியில் உள்ளனர். கோவில் கட்டுவதற்கு நயன்தாராவிடமும், அனுமதி கேட்டுள்ளனர். ஆனால் நயன்தாரா இதற்கு சம்மதிக்கவில்லை. கோவில் கட்ட வேண்டாம் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அது தொடர்பில் அவர் கூறியிருந்ததாவது, "ரசிகர்களின் அன்பும் ஆதரவும் எனக்குப் போதுமானது. இதற்கு மேல் எதையும் நான் எதிர்பார்க்கவில்லை. எனக்கு கோவில் கட்டும் செயலில் ஈடுபடாதீர்கள் என் வேண்டுகோளையும் மீறி கோவில் கட்டினால், அது மன அமைதியைக் கெடுப்பதாக இருக்கும் என்று கூறியுள்ளார்.

# விஷாலுக்கு ஜோடி ஸ்ருதியா? லெட்சுமி மேனனா?

"பூஜை" படத்தில் விஷாலும், ஸ்ருதி ஹாசனும் இணைந்து நடிக்கின்றனர். ஹரி இயக்கும் இப்படம் தீபாவளிக்கு ரிலீஸ் ஆகிறது.

அடுத்து சுசீந்திரன் இயக் கத்தில் உருவாகும் படத்தை விஷால் தயாரித்து நடிக்கிறார்.இப்படததிலும் ஸருதி ஹாசனை ஜோடியாக்கலாம் என விஷால் நினைத்தாராம்.

ஆனால், ஸ்ருதி ரொம்ப பிஸியாக இருக்கிறார்.இரண்டு இந்திப் படங்களில்நடித்து முடித்த கையோடு, இன்னும் இரு படங்களில் நடிக்க ஒப்பந்தம் ஆகியிருக்கிறார்.

இன்னும் பெயர் அறிவிக்கப் படாத இந்த படத்தின் நாயகிக்கு லோக்கல் சிட்டி பெண் வேடமாம். தற்போது ஸ்ருதியிடம் உடனடி கால்ஷீட் இல்லாததால் லட்சுமி மேனனுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.

லட்சுமி மேனன் மூன்றாவது முறையாக விஷாலுடன் ஜோடி போடுவாரா என்பது விரைவில் தெரிந்துவிடும்.

# யார்கையில் எத்தனை படங்கள்?



நயன்தாரா, அனுஷ்கா, சமந்தா, த்ரிஷா, ஸ்ருதி ஹாசன, ஹன்சிகா, தமன்னா, காஜல்அகர்வால், லட்சுமிமேனன், ஸ்ரீதிவ்யா ஆகியோர் தமிழ் சினிமாவின் முன்னணி ஹீரோயின்களாக இருக் கிறார்கள்.

**இந்தஹிட் ஹீரோயின்கள் நடிக்கும் படங்களின் லிஸ்ட்**

நயன்தாரா, சிம்புவுடன் 'இது நம்ம ஆளு', ஜெயம் ரவியுடன் 'தனி ஒருவன்' மற்றும் உதயநிதி ஸ்டாலினுடன் 'நண பேன்டா' உள்ளிட்ட படங்களில் நடித்து வருகிறார்.

சமந்தா வசம் 'கத்தி', 'பத்து எண்ணுறதுக்குள்ள' என இரண்டு தமிழ்ப் படங்கள் உள்ளன. அடுத்து, "பெங்களூர் டேஸ்" படத்தின் தமிழ் ரீமேக்கில் சமந்தா நடிக்கவுள்ளார்.

ஸ்ருதிஹாசன் 'பூஜை' படத்தைத் தொடர்ந்து விஜய் நடிக்கும் அடுத்த படத்தில் நடிக்கிறார்.இந்தியில் செம பிஸியாகி விட்ட ஸ்ருதிஹாசன் அடுத்து விஷால் – சுசீந்திரன் கூட்டணியில் இவர் நடிக்கலாம் என்ற பேச்சு வார்த்தையும் நடந்து வருகிறது.

# செல்.'.பி புள்ள பாடல் எங்கே படமாக்கப்படும்?



அண்மையில் 'கத்தி' படத்தின் பாடல்கள் வெளியாகின. 'ஐ' மற்றும் 'கத்தி' பாடல்களில் எது முன்னணி என இணையத்தில் பலத்து போட்டி நிலவுகிறது. ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய், சமந்தா நடிப்பில் உருவாகி வரும் படம் 'கத்தி' படத்தின் படப்பிடிப்புகள் பெரும்பாலும் முடிந்து விட்டன. பாடல் காட்சிகள் மட்டும் மீதியுள்ளன. செல்ஃபி புள்ள பாடல் எங்கே எடுக்கலாம் என்பதில் படக்குழு தீவிர கவனம் செலுத்திவருகின்றது. அனைத்து ரசிகர்கள் மத்தியிலும் இப்பாடல் பிரபலமாக இருப்பதால் பிரமாண்டமாக எடுக்கத் திட்டம் இருக்கிறதாம்.

# 'ஐ' விக்ரம் அசத்தும் கெட்டப்





கனிக்கா திவாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நாவலர் சிலை கடந்த 22 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.இதன் போது வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன், வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா ,நாவலர் நற்பணி மன்ற தலைவர் கருணை ஆனந்தன், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் உள்ளிட்ட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் திறந்து வைக்கப்பட்ட நாவலர் சிலைக்கு அமைச்சர் குருகுலராஜா பொன்னாடைபோர்த்துவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)



நீர்வேலி றோ.க.த.க பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் கூடுதல் புள்ளிகளைப் பெற்ற கு.பிரவீனுக்கு கனடாவில் வாழும் பழைய மாணவன் கோபால சிங்கம் ஜீவா அன்பளிப்பாக வழங்கிய துவிச்சக்கரவண்டியை நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மாகாண கல்விப் பணிப்பாளர் ஆர்.இராஜேந்திரன் வழங்குவதையும் அருகில் பாடசாலை அதிபர் சி.தர்மரத்தினம், புலமைப்பரிசில் ஆசிரியை வசந்தி மகேந்திரன் மற்றும் விருந்தினர்கள் ஆகியோர் நிற்பதை படத்தில் காணலாம்.





யாழ்.இந்துக்கல்லூரியில் தமிழ் மொழித்தினம் அண்மையில் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.இதன் போது தேசிய மட்டத்தில் முதலிடம்பெற்ற வில்லுப் பாட்டு குழுவினர் கௌரவிக்கப்பட்டு விருந்தினர்களுடன் அழைத்து வரப்படுவதையும் தேசிய மட்டத்தில் முதல் இடம்பெற்ற **தக்கன்வதம்** கூத்து மேடையேற்றப்பட்டதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்.



யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியத்திற்கு அச்சுவேலிக்கிளை உறுப்பினரும் சுவிஸ் வாழ் அன்பருமான செல்வராசா சிவாரட்ணம் கதிரைகளை அண்மையில் அன்பளிப்பாக வழங்கினார்.



இந்திய அரசின் கலாசார அமைச்சின் ஆதரவுடன் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகமானது கலாசார நிகழ்வுகளை கடந்த மூன்று வருடங்களாக வடக்கு மாகாணத்தில் நடத்தி வருகிறது. இம்முறை யும் இந்தியத் துணைத்தூதரகம் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் 2015 பெப்ரவரி வரை நான்கு கலாசார நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளது. இக்கலாசார நிகழ்வுத் தொடரில் முதலாவது கலாசார நிகழ்வானது கடந்த 21 ஆம் திகதி வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியுடன் இணைந்து வவுனியா நகரசபை மண்டபத்தில் நடத்தப்பட்டது போது...

## நிகழ்வின் நிழல்கள்







யாழ்.ஊரெழு கிழக்கு வளர்பிறை பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்ற போது சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மாணவரொருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் இடம்பெற்ற சிறார்களின் மைதான இடைவேளை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

936

## இனிப்பு மாங்காய்!



தினமும் மோகன் கொண்டு வந்து நண்பர்களுக்கு தரும் மாங்காய்க்காக ஏங்குபவர்களில் பாபுவும் ஒருவன்.

மாடசாமி தோப்பு மாங்காய் என்றாலே அந்த ஏரியாவே நாவில் நீர் சொட்ட ஆவலாய் எதிர்பார்க்கும். அவ்வளவு இனிப்பு.

கொத்துக் கொத்தாய்த் தொங்கும் காய்களைக் கல்விட்டெறிந்து கொண்டு செல்லவும் முடியாது. காரணம், சுற்றிலும் போடப்பட்டுள்ள முள்வேலி! கீழே விழுகின்ற காய்கள் வேலிக்குள்தான் விழும். யாரும் உள்ளே போய் எடுக்க முடியாது.

வேலியோடு மட்டுமல்லாது ஒரு முரட்டுக் காவலாளியையும் போட்டிருந்தார் மாடசாமி. அந்தக் காவல்காரனை மீறித் தோப்புக்குள் யாரும் நுழைய முடியாது.

அதனாலேயே அந்த வழியாகப் போவோர் நிலவை அண்ணார்ந்து பார்த்து ரசிப்பதுபோல் மாங்காய்களை ரசித்துவிட்டுக் கற்பனையிலேயே அவற்றை ருசித்துவிட்டுப் போவார்கள்.

அப்படியிருந்தும்... ஆறாம் வகுப்பில் படிக்கும் மோகன் மட்டும் எப்படி தினமும் ஒன்றிரண்டு மாங்காயோடு பள்ளிக்கு வருகிறான் என்பது மற்ற மாணவர்களுக்குப் புதிராகவே இருந்தது.

தினமும் மோகன் தான்கொண்டு வரும் மாங்காயைப் பத்தைகளாகக் கீறி நண்பர்களுக்குக் கொடுப்பான். அதற்குப் பதிலாகக் காசு வாங்கிக் கொள்வான்.

பாபுவிடம் காசு இருப்பதில்லை. ஆனால் ஆசை மட்டும் அவனை விட்டபாடில்லை.

மற்ற மாணவர்கள் மாங்காயைத் தின்னும் போது பாபுவுக்கு நாவில் நீர் ஊறும். எப்படியாவது தானும் ஒருநாள் மாடசாமி தோப்பு மாங்காயைப் பறித்து இதே போல் தின்று காட்டிவேண்டும் என்று மனத்திற்குள் முடிவெடுத்தான்.

அவன் எடுத்த அந்த முடிவுக்கு முக்கிய காரணமே காசில்லாமல் மாங்காய் கேட்கும்போதெல்லாம் மோகன் பாபுவை அவமானப்படுத்தியதுதான்.

எப்படியாவது மோகனிடம் பேசி நெருங்கிய நண்பனாகி அவன் எந்த வழியில் மாங்காயைக் கொண்டு வருகிறான் என்பதை அறிந்து கொள்ள விரும்பினான்.

பாபுவின் விருப்பப்படியே மோகன் கொஞ்சம் கொஞ்சமாக பாபுவிடம் நெருக்கமானான்.

இருவரும் சேர்ந்து மாங்காய் திருடிக் கொண்டு வந்தால் நிறைய காய்கள் கொண்டு வரலாம்; நிறைய காசுக்கு விற்கலாம்; கிடைப்பதை ஆளுக்குப் பாதி பிரித்துக் கொள்ளலாம் என்று மோகனும் பாபுவுக்கு ஆசை காட்டினான்.

பாபு, மோகனுடன் சேர்ந்து மாங்காய் திருடமுடிவெடுத்தான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நேரம். மோகன் முன்பே சொல்லியிருந்த இடத்துக்கு பாபு வந்து சேர்ந்தான்.

பாபுவின் தோள்மீது கைபோட்டபடியே ரகசியமாக தான் வழக்கமான உள்ளே நுழையும் இடத்துக்கு மோகன் அவனை அழைத்துச் சென்றான்.

தோப்புக்கு வடக்குப் பக்கமாக இருந்தது அந்த வேலி. மிகவும் அடர்த்தியான முள்வேலி. உள்ளே இரண்டுபேர் ஒளிந்திருந்தாலும் வெளியே தெரியாது. அடிப்பக்கம் இருந்த முட்களை எல்லாம் நீக்கி ஏற்கனவே சரிசெய்து வழியாக்கி இருந்தான் மோகன். உட்கார்ந்தபடியே மெல்ல நகர்ந்து உள்ளே போகக்கூடிய அளவுக்கு அருமையான திருட்டு வழி. மோகன் ஓசைப்படாமல் குனிந்து மெல்ல நகர்ந்து உள்ளே போனான். பாபு அவனைப் பின்தொடர்ந்தான். அந்த வழியைச் சரியாகப் பார்த்துக் கொண்டான் பாபு. அப்போது தானே அவன் தனியாக அடுத்த முறை வரமுடியும். மோகன் வேலியைக் கடந்துவிட்டான். பாபு நிமிரும் நேரம் அவனுடைய முதுகில் ஏதோ குத்தியது. ஆ... என்ற அலறல் அவனது தொண்டையிலேயே அடங்கிப்போனது. சட்டை கிழிந்து முதுகிலே கீறிக் காயம் ஏற்பட்டு இரத்தம் வருவதை அவனால் உணமுடிந்தது. ஆனால் வெளிக்காட்டமுடியவில்லை. சத்தம்போடாமல் அவனைப் பின்தொடருமாறு சைகை காட்டினான்.

(தொடரும்)

09.2014
28

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1066 - முதலாம் வில்லியம் இங்கிலாந்தை முற்றுகையிட்டான்.
- 1448 - முதலாம் கிறிஸ்டியன் டென்மார்க் மன்னனாக முடிசூடினான்.
- 1687 - கிரேக்கத்தின் பழங்காலக் கட்டடம் பார்த்தினன் குண்டு வெடிப்பில் சேதமடைந்தது.
- 1708 - ரஷ்யாவின் முதலாம் பீட்டர் மன்னன் சுவீடன் படைகளை லெஸ்னயா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தான்.
- 1791-பிரான்ஸ் ஐரோப்பாவில் யூதர்களை அடிமைத்தளையிலிருந்து விடுவித்த முதலாவது நாடானது.
- 1795 - யாழ்ப்பாணத்தை ஜெனரல் ஸ்ட்வேர்ட் தலைமையிலான பிரித்தானியப் படைகள் கைப்பற்றினர்.
- 1867 - டொரோண்டோ ஒண்டாரியோவின் தலைநகரமாகியது.
- 1867 - ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவைக் கைப்பற்றியது.
- 1889 - நிறை மற்றும் அளைவைகளுக்கான பொது மாநாட்டில் மீட்டரின் நீளமானது பனிக்கட்டியின் உருகு நிலையில் 10 விழுக்காடு இரிடியம் கலந்த பிளாட்டினம் கலவையின் கோள் ஒன்றின் இரண்டு கோடுகளிறகிடையேயான நீளத்துக்கு சமனாக அறிவிக்கப்பட்டது.
- 1895 - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தற்போதைய கடடம் கட்டப்பட்டது.
- 1928 - அலெக்சாண்டர் பிளெமிங் பெனிசிலினைக் கண்டுபிடித்தார்.
- 1939 - நாசி ஜேர்மனியும் சோவியத் ஒன்றியமும் போலந்து நாட்டை தமக்குள் பங்கு போட உடன்பட்டன.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: போலந்தின் தலைநகர் வார்சா ஜேர்மனியிடம் வீழ்ந்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணுவப் படைகள் எஸ்தோனியாவிலிருந்த நாசிகளின் குளுாகா வதைமுகாமை விடுவித்தனர்.
- 1950-இந்தோனேசியா ஐ.நாவில் இணைந்தது.
- 1958 - பிரெஞ்சு ஐந்தாவது குடியரசு அமைக்கப்பட்டது.
- 1960-மாலி, செனெகல ஆகிய நாடுகள் ஐ.நாவில் இணைந்தன.
- 1961 - டமாஸ்கசில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் பின்னர் எகிப்து, சிரியா ஒன்றியமான ஐக்கிய அரபுக் குடியரசு முடிவுக்கு வந்தது
- 1993 - புலோப்பளைச் சமர்: கிளாலிப் பாதையை மூடும் இலக்குக் கொண்ட "யாழ்தேவி இராணுவ நடவடிக்கை" விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.
- 1995 - பொப் டெனார்ட் மற்றும் சில கூலிப் படைகள் கொமரோஸ் தீவுகளைக் கைப்பற்றினர்.
- 2005 - ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடைசெய்தது.

### பிறப்புகள்

- கிமு 551 - கன்ஃபூசியஸ் சீனாவின் பகுத்தறிவாளர் (இ. கி.மு 479)
- 1852 - ஹென்றி முவாசான், பிரெஞ்சு வேதியியல் அறிஞர் (இ. 1907)
- 1929 - லதா மங்கேஷ்கர், இந்தியப் பின்னணிப் பாடகி.
- 1947 - ஷேக் ஹசீனா, வங்காளதேசத்தின் முன்னாள் பிரதமர்
- 1982 - அபினவ் பிந்திரா, இந்திய ஒலிம்பிக் வீரர்
- 1982 - எமெக்கா ஒகஃபோர், அமெரிக்க கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1895 - லூயி பாஸ்டர், பிரெஞ்சு அறிவியலாளர் (பி. 1822)
- 1953 - எட்வின் ஹபிள், அமெரிக்க வானியலாளர் (பி. 1889)
- 1956 - வில்லியம் போயிங், அமெரிக்க வான்வெளி முன்னோடி (பி. 1881)
- 1970 - கமால் அப்துல் நாசர், எகிப்திய அதிபர் (பி. 1918)
- 1978 - பாப்பரசர் முதலாம் அருளப்பர் சின்னப்பர், (பி. 1912)
- 1989 - பேர்டினண்ட் மார்க்கொஸ், பிலிப்பீன்ஸ் அதிபர் (பி. 1917)
- 1994 - [illegible] நடிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநிர்ணய உரிமையோடு கூடிய தீர்வு

# முஸ்லிம் மக்களுக்கும் அவசியமானது



## அமைச்சர் பஷீர்சேகுதாவூத்

(கொழும்பு)

"எதிர்கால அரசியல் வியூகத்தை வகுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தொடர்ந்து பேச்சு வார்த்தையில் ஈடுபட ஒப்புக் கொணடிருக்கின்றன." என உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் - மீராகேணி பஷீர் சேகுதாவூத் வித்தியாலயத்தில் 50 இலட்சம் ரூபா செலவிலான மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.எல். பாறூக் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பகல் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அமைச்சர் பஷீர் சேகுதாவூத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

.முக்கியமான அரசியல் சூழ்நிலை இலங்கையில் நிலவுகிறது. ஊவா மாகாண சபைத் தேர்தல் முடிவடைந்த பின்னர் எல்லா அரசியல் கட்சிகளும் துள்ளிக் குதித்து எழுந்து நிற்கின்றன. எல்லா ஊடகங்களும் ஊவா மாகாண சபைத் தேர்தல் அரசுக்கான ஒரு சிவப்புச் சமிக்ஞை என்று செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. எனது பார்வையில் இது அரசுக்கு மாத் திரம் சிவப்பு சமிக்ஞை அல்ல. இது எதிர்க் கட்சிகளுக்கும் ஒரு சிவப்பு சமிக்ஞை தான். கடந்த தேர்தலை விட இந்தத் தேர்தலில் அரசாங்கத்திற்கு வாக்குகள் குறைந்திருப்பது சிவப்பு சமிக்ஞை என்றால், கடந்த காலங்க ளில் இருந்த பிரிவினை போல எதிர்க்கட் சிகள் தொடர்ந்து பிரிவினையில் இருந் தால் அது உங்களுக்கும் ஆகாது என்று எதிர்க் கட்சிகளைப் பார்த்துச் சொல கின்ற ஒரு சிவ ப்பு சமிக்ஞையும் கூட.

எதிர்க்கட்சிகளில் பிரதான இடத்தில் இருக்கின்ற ஐ.தே.க. இதனைக் கணக்கில் எடுக்கவில்லை போல்தான் தெரிகிறது. அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அதனைப் பொருட்படுத்தவில்லை. ஜே.வி.பி. தலைவரும் அதன் முக்கிய உறுப்பினர்களும், சரத் பொன்சேகாவின் கட்சியினரும் தங்களுக்குரிய இந்த மிகப் பெரிய சிவப்பு விளக்கு சமிக்ஞையை பொருட்படுத்தவில்லை என்பது போலத்தான் தேர்தலுக்குப் பின்னரான அவர்களது செயற்பாடுகள் அமைந்துள்ளன.

உண்மையிலேயே ஊவா மாகாண சபைத் தேர்தல் இந்த நாட்டினுடைய ஒட்டு மொத்த ஜனநாயக அரசியலின் தேர்தல் நடைமுறைகளை பிழையானது என்று காட்டுகின்ற சிவப்பு விளக்கு என்பதைப் புரிந்து கொள்ளுகின்ற போது மாத்திரம்தான் எதிர்காலத்திலே ஓர் உருப்படியான ஜனநாயக அரசியல் முறைமையைக் கொண்டுவர முடியும்.

தேர்தல் வரைமுறைகள் எல்லா இனங்களையும் சமத்துவமாக மதிக்கின்ற எல்லோரும் இலங்கையர்கள் என்கின்ற யாப்புத் திருத்தம் வந்தால்தான் இலங்கை இனப் பிரச்சினையின் சகல வடிவங்களையும் ஒட்டு மொத்தமாகத் தீர்த்து வைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது இன்று நல்ல சகுனம் உருவாகியிருக்கின்றது.

முக்கியமாக சிறுபான்மைக் கட்சிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தொடர்ந்து பேச்சு வார்த்தையில் ஈடுபட ஒப்புக் கொண்டிருக்கின்றன. இந்தப் பேச்சுவார்த்தையிலே இனப் பிரச்சினைத் தீர்வுக்கான விடயங்களைத் தெளிவாகப் பேச வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

இந்த இனப்பிரச்சினைத் தீர்வு விடயங்களிலே தமிழர்களுடைய அடிப்படை அபிலாஷை என்பது வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்த ஓர் அலகு. அந்த அலகிற்குள்ளே தங்களுக்குள்ள உள்ளக சுய நிர்ணய உரிமை ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் நின்று கொண்டு இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்திலே, சரியான, தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்கின்ற அடிப்படையிலான சுய நிர்ணய உரிமையோடு கூடிய ஓர் தீர்வு என்பதுதான் முஸ்லிம்களுக்கும் வேண்டும்.

இந்தத் தர்வு சம்பந்தமாக முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுக்கு முழுமையான அனுசரணையைக் கொடுக்கின்ற வகையிலே தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையிலே இதய சுத்தியோடு பேச்சுவார்த்தை அமைய வேண்டும். இதே போன்று வடக்கு மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணத்திலே வாழ்கின்ற தமிழ் மக்களுக்குச் சமாந்தரமாக உரிமையோடு வாழ நினைக்கின்ற முஸ்லிம் மக்களின் அபிலாஷையும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணத்திலே நிலத் தொடர்பற்ற அடிப்படையிலே 2000 ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையாருடைய யாப்பு மாற்றத்திற்கான முன்மொழிவிலே கூறப்பட்டிருக்கின்ற விடயத்திற்கு மேலதிகமாக- எவ்வாறு தமிழ் மக்களுக்கான இந்த அபிலாஷை இருக்கின்றதோ அதேபோன்றுதான் கடந்த 32 வருட கால வன்முறை அரசியலின் தாக்கங்களின் அனுபவத்தின் அடிப்படையிலே மூன்று இனங்களும் சமாந்தரமாகப் பாதிக்கப்பட்டார்கள் என்ற யதார்த்தத்தின் அடிப்படையில் முஸ்லிம்களுக்கும் சுய நிர்ணய உரிமையோடு கூடிய - முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட - ஓரலகு கிடைக்க வேண்டும்.

எனவே இந்த இரண்டு விடயங்களையும் முன்னிறுத்தியதாக முஸ்லிம்களுக்கான தீர்வை தமிழ்த் தரப்பின் மேசையிலே போட்டு அலசி ஆராய்ந்து ஒத்திசைந்து எடுக்கின்ற அதன் இறுதி வடிவத்தை சிங்க ளப் பெரும்பான்மை அரச மேசையிலே போட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# நிதியத்தில் அரசாங்கம் விளையாடவே கூடாது

## ரவி.எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியத்தில் அரசாங்கம் விளையாடக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊழியர் சேமலாப நிதியப் பணம் தொடர்பில் நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாதத்தில் பங்கேற்ற போது அவர் இதனைக் தெரிவித்தார்.

பணத்தை வீண் விரயம் செய்ய வேண்டாம்.

தனியார் துறையில் கடமையாற்றி வரும் சிலர் 55 வயதில் ஓய்வு பெற்றுக்கொள்ள அஞ்சுகின்றனர்.

ஏனெனில் தங்களது ஊழியர் சேமலாபநிதிப் பணம் கிடைக்காது என்ற அச்சமே இதற்கான காரணமாகும் என அவர் தெரிவித்தார்.மேலும் ஊழியர் சேமலாப நிதியப் பணத்தை அரசாங்கம் மோசடி செய்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தொழிலாளர்களின் பணத்தை முதலீடு செய்யும் போது மிகவும் நிதானத்துடன் முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. (இ)

# தேர்தல் கண்காணிப்பாளர் மீது

# அமைச்சர் டிலான் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஊவா மாகாண தேர்தலின் போது தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஒருபக்க சார்பாக நடந்துகொண்டதாக அமைச்சர் டிலான் பெரேரா குற்றம் சுமத்தியுள்ளார்

தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவாக செயற்பட்டதாக அமைச்சர் டிலான் பெரேரா குற்றம் சுமத்தியுள்ளார்.

கபே மற்றும் பவ்ரல் ஆகியவற்றின் தகவல்படி தேர்தலுக்கு பின்னர் 9 வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இவை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஆதரவாளர்களால் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக்குற்றச்சாட்டு அமைச்சர் டிலான் பெரேரா மீதும் சுமத்தப்பட்டிருந்தது.

அவரின் தேர்தல் தொகுதியான ஹாலி எலையில் வைத்து ஐக்கிய தேசியக்கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் ஹரின் பெர்ணான்டோவின் வாகன அணி மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டே அவர் மீது சுமத்தப்பட்டிருந்தது.

எனினும் அந்த சம்பவத்தில் தமக்கு தொடர்பில்லை என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# வாரம் ஒரு தகவல்

## ஒரு காதல் கதை

"அப்பா உங்களிடம் ஒரு கேள்வி"

"என்ன கேட்கப் போகிறாய்?"

"வாழ்க்கையில் 3 முக்கியமான விடயங்கள் என்ன தெரியுமா?"

"தெரியவில்லையே"

"எனக்குத் தெரியுமே. ஒரு புத்தகத்தில் படித்தேன்"

"என்ன படித்தாய்?"

"வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு விடயம் யாரையாவது காதலிக்க வேண்டும்.

இரண்டாவது முக்கியமான விடயம்: யாராவது நம்மைக் காதலிக்க வேண்டும்"

"மூன்றாவது முக்கியமான விடயம்: இவையிரண்டும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும்"

"இப்பதான் தெரியுது... நீ எப்படியான விடயங்களை அதிகமாக படிக்கிறாய் என்று" நான் என்னப்பா இன்னமும் சின்னக் குழந்தையா? வயதாகி விட்டதல்லவா?"

"புரியுதடா... ஏற்பாடு பண்ணுறேன்"

"நேற்றுக் கூட அம்மா என்னை எங்கே என்று தேடிய போது அவன் எங்கே போயிருப்பேன். கழுதை கெட்டால் குட்டிச்சுவர் என்று சொன்னீங்களாமே?"

"ஆமாம். சொன்னேன்"

"இனிமேல் அப்படியெல்லாம் சொல்லாதீங்கப்பா"

"என்னடா சொல்கிறாய்?"

"அதற்கில்லையப்பா, நான் இப்பொழுது வாலிபன் இனி மேல் என்னை கழுதை என்று சொல்வது நல்லா இருக்காது என்று நினைக்கிறேன்" "ஏன்?"


"எதிர்வீட்டுப் பெண்ணை அவளுடைய அப்பா குட்டிச்சுவர் என்று சொல்லித் திட்டிக் கொண்டிருக்கிறார். அதனால... சொன்னேன்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்வுக்குழு மூலம் நீதிபதிகள் நியமிப்பு!

## தலைமை நீதிபதி லோதா கருத்து



நீதிபதிகள் அடங்கிய தேர்வுக்குழு மூலமாக, உயர் நீதிமன்ற நீதிபதிகள் தேர்வு செய்யப்பட்டு வந்தனர். இந் நிலையில், அந்த முறைக்கு பதிலாக, நீதித்துறை ஆணை யம் மூலம் நீதிபதிகளை தேர்வு செய்வதற்கான மசோதா, பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், உயர் நீதி மன்ற தலைமை நீதிபதி ஆர்.எம்.லோதா, நேற்றுடன் ஓய்வு பெற்றார். இதையொட்டி, நேற்றுமுன்தினம் அவர் அளித்த பேட்டியில், நீதப திகள் தேர்வுக்குழு முறைக்கு ஆதரவாக கருத்து தெரிவித் தார்.

அதில் அவர் கூறியதா வது,

நீதிபதிகளை தேர்வு செய்ய நீதிபதிகளே பொருத்தமான வர்கள் என்பது எனது கரு த்து. ஒருவரின் நீதிமன்ற செயற்பாடு, நடத்தை, திறமை, சட்ட அறிவு மற்றும் இதர அம்சங்களை நீதிபதிகள் தான் அறிவார்கள்.

எனவே, ஒருவர் நீதிபதி பணிக்கு தகுதியானவரா என்று நீதிபதிகள்தான் சிற ப்பாக கணிக்க முடியும். அவர்களை விட பொருத் தமானவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது.

நீதிபதிகள் தேர்வுக்கு முவைத்தவிர, ஏனைய துறை யினர் சம்பந்தப்பட்ட அமைப் புகள் மூலமாக நீதிபதிகளை தேர்வு செய்தால், அது நீதித் துறையின் சுதந்திரத்தை பாதிக்கும்.

மேலும், உயர்நீதிமறை, மேல் நீதிமன்ற தலைமை நீதிபதிகள், நீதிபதிகள் பணி யில் இருந்து ஓய்வு பெற்ற வர்கள், ஓய்வு பெற்று 2 ஆண்டுகள் வரை அரசியல் சட்ட பதவியோ, வேறு அரசு பதவிகளோ ஏற்கக்கூடாது என்பது எனது கருத்து. 2 ஆண்டுகள் இடைவெளி விடுவது நல்லது.

இருப்பினும், சில தீர்ப் பாயங்கள் மற்றும் விசா ரணை கமிஷன்களுக்கு ஓய்வு பெற்ற நீதிபதிகளைத்தான் நியமிக்க வேண்டியுள்ளது. அதற்கு மாற்று ஏற்பாடு செய் யப்படும்வரை, அந்த பணி களை ஓய்வு பெற்ற நீதிப திகள் ஏற்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)





# 4 தீவிரவாதிகள் கைது

காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் மிகப்பெரிய தாக்குதல் நடத்த திட்டமிட் டிருந்த 4 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

ஸ்ரீநகரில் இருந்து 52 கி.மீ. தொலைவில் உள்ள சோபோர் நகரின் பாட்டா போரா பகுதியில் நேற்று முனதினம் பாதுகாப்பு படையி னர் அதிரடி தேடுதல் வேட்டை யில் ஈடுபட்டனர்.

இதில், ஹிஸ்புல் முஜாகி தீன் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த யாவர் முசாபர் பட், சோயிப் உல் ஹமித், அன் சார் பின் அல்டாப் மற்றும் தியாஸ் அகமது தார் ஆகி யோர் கைது செய்யப்பட் டனர். அவர்களிடம் இருந்து 2 பிஸ்டல்கள், 2 மேகசி ன்கள், 14 பிஸ்டல் ரவுண் டுகள், இரண்டு சீன கை யெறி குண்டுகள் ஆகியவை கைப்பற்றப்பட்டன. (இ)




# கேரளாவில் அரசியல் கொலைகளை மாநில அரசாங்கம் தடுக்கவேண்டும்

## ராஜ் நாத் சிங் கோரிக்கை

கேரள மாநிலம் கண் ணூர் பகுதியை சேர்ந்த ஆர்.எஸ்எஸ் நிர்வாகி மனோஜ் கடந்த சில வாரங்களுக்கு முன்பு வெடிகுண்டு வீசியும், அரிவாளால் வெட்டியும் படு கொலை செய்யப்பட்டார். இந்த கொலை கேரள அரசிய லில் பெரும் பரபரப்பை ஏற்ப டுத்தியுள்ளது.

இந்த கொலை பற்றி சி.பி. ஐ. விசாரணை நடத்த கேரள அரசுக்கு கோரிக்கை விடுக் கப்பட்டது. இதை ஏற்று சி.பி. ஐ. விசாரிக்க கேரள அரசு அனுமதி அளித்து உள்ளது. இந்த நிலையில் கொலை யுண்ட மனோஜ் வீட்டிற்கு மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் சென்று அவரது குடும்பத் தினருக்கு ஆறுதல் கூறினார்.

அதன் பிறகு அவர் நிரு பர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

ஆர்.எஸ்.எஸ். நிர்வாகி மனோஜ் கொல்லப்பட்டது துரதிர்ஷ்டவசமானது. இந்த கொலை பற்றி சி.பி.ஐ. விசா ரணை விரைவில் தொடங் கும். கேரளாவில் அரசியல் கொலைகள் அதிகரித்து இரு ப்பது கவலை அளிக்கிறது.

பாரதீய ஜனதா தொண் டர்கள்தான் அதிகளவில் கொலை செய்யப்பட்டுள்ள னர். இதை தடுக்க கேரள அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாரதீய ஜனதாவின் வளர்ச்சியை பொறுக்க முடியாமல் இந்த கொலைகள் நடைபெறுகிறது.

பொதுமக்கள் அச்சமில் லாமல் வாழும் சூழ்நிலையை மாநில அரசு உருவா க்க வேண்டும் என மத்திய அமைச்சர் மேலும் கூறி னார். (இ)

# என் மீதான குற்றச்சாட்டுக்கு எந்த ஆவணமும் இல்லை

## கனிமொழி உறுதி



2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பான வழக்குகளில், தி.மு.க.வுக்கு சொந்தமான கலைஞர் டி.வி. பெற்ற ரூ.200 கோடி பற்றிய வழக்கும் ஒன் றாகும்.

இந்த வழக்கை சி.பி.ஐ. நடத்தி வருகிறது. வழக்கு வசாரணை, டில்லி சி.பி.ஐ. நீது மன்றில்நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இவ்வழ க்கில் குற்றச்சாட்டுகள் பதிவு செய்வது தொடர்பான வாதம், டில்லி சி.பி.ஐ. நீதிமன்றில் நீதிபதி ஓ.பி.ஷைனி முன்பு நேற்று முன்தினம் நடைபெற் றது. சிறப்பு அரசு சட்டத்தரணி ஆனந்த் குரோவர் வாதிடுகை யில், 'கலைஞர் டி.வி.க்கு வந்த பணம், நேர்மையான வரத்தக பரிவர்த்தனை அல்ல' என்று கூறினார்.

கனிமொழி சார்பில் அவ ருடைய சட்டத்தரணி ஷில் பஜாஜ் ஆஜராகி வாதாடினார். அப்போது அவர் கூறியதா வது,

இந்த வழக்கில் கனிமொழி மீதான குற்றச்சாட்டு என்ன வென்றால், அவர் ஆ.ராசா வுடன் சேர்ந்து, கலைஞர் டி.வி.க்கு ரூ.200 கோடி சென்றடைய ஏற்பாடு செய் தார் என்பதுதான். ஆனால் இதற்கு எந்த ஆவணமும் இல்லை. இவ்வழக்கில், அமுலாக்கப்பிரிவு தாக்கல் செய்த புகாரிலோ, சாட்சி களின் வாக்குமூலங்களிலோ, கனிமொழி இந்த பணப் பரி வர்த்தனையில் சம்பந்தப பட்டு இருப்பதாக எந்த இடத்தி லும் காட்டப்படவில்லை.

ஆகவே, இந்த ஆவணங் களையும், வாக்குமூலங்க ளையும் அப்படியே ஏற்றுக் கொண்டு, கனிமொழிக்கு எதிராக எந்த ஆதாரமும் இல்லை என்ற முடிவுக்கு நீதிமன்று வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வாதிட் டார். (இ)

# மோடி அரசின் மீது ப.சி-யின் 10 குற்றச்சாட்டு

நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தோற்றிருந்தாலும் மத்தியில் அமைந்துள்ள புதிய அரசை நாம் அந்நிய அரசாகப் பார்க்க முடியாது. அந்த அரசை விமர்சிக்கும் வேளை ஆரம்பமாகிவிட்டது! என்ற பீடிகையுடன் கிளம்பிவிட்டார் முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம். தென்சென்னை காங்கிரஸ் செயல்வீரர்கள் கூட்டம் காமராஜர் அரங்கில் கடந்த 22ஆம் திகதி நடந்தது. இதில் பேசிய ப.சிதம்பரம் மத்திய அரசுக்கு எதிராக 10 குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். அவை,

**1. பிரதமரிடம் அதிகாரம் குவிப்பு!**

அனைத்து அதிகாரங்களும் பிரதமர் கையில் இருக்கிறது. எந்த அமைச்சருக்கும் எந்த அதிகாரமும் கிடையாது. அனைத்து முடிவுகளையும் பிரதமர் அலுவலகம் எடுக்கிறது. கேபினெட் ஆட்சி முறை நடைமுறையில் உள்ள நமது நாட்டில் கேபினெட் அமைச்சர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. எனவே, அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

**2. அதிகாரவர்க்கத்தின் அதிகாரம்!**

ஜனநாயக நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைவர்கள்தான் முடிவு எடுக்க வேண்டும். ஆனால், இப்போது அனைத்து அதிகாரங்களும் அதிகாரிகள் கையில் தரப்பட்டுள்ளன. துறை அமைச்சரின் அதிகாரிகள், பிரதமரிடம் நேரடியாகப் பேசி அவர் கருத்தைப் பெற்று அமைச்சரிடம் காண்பிக்கிறார்கள். அவரும் வேறு வழியில்லாமல் ஓகே சொல்கிறார். அதிகாரிகளின் அதிகாரத்தைக் குறைக்க வேண்டும்.

**3. அதிகாரங்களைக் கைப்பறறுதல்!**

அனைத்து அரசு நிறுவனங்களையும் கையகப்படுத்தும் போக்கு மத்திய அரசின் செயற்றிட்டமாக இருக்கிறது. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் முதல், ஒவ்வோர் அமைப்புகளின் தலைமை நிர்வாகிகளையும் இராஜினாமா செய்யச் சொல்லி மிரட்டுகிறார்கள். இது தவிர்க்கப்பட வேண்டும்.

**4. கல்வி நிலையங்களில் தலையீடு!**

மத்திய மனிதவளத்துறை அமைச்சராக இருக்கும் ஸ்மிருதி இராணி, தன்னாட்சி கொண்ட பல்கலைக்கழக மானியக்குழுவின் நிர்வாகத்தில் தலையிடுகிறார். அங்கே கருத்து மோதல் வரும்போதுதான் நல்ல கருத்துகள் உருவாகும். அதை எல்லாம் ஒதுக்கிவிட்டு அமைச்சர் சொல்வதை மட்டும் செய் என்கிறார்கள். அதனால் கல்வி நிறுவனங்களின் தரம் இன்னும் குறையும்.

**5. பெண்களைப்பற்றி இழிவான மதிப்பீடு!**

பெண் என்றால் ஒரு "பொருள்" என்று பி.ஜே.பி-யினர் நினைக்கிறார்கள். பெண்கள்பற்றி பி.ஜே.பி- தலைவர்கள் பேசுகிற, எழுதுகிற மிகுந்த கருத்துகள் கவலை தருகின்றன. இப்படித்தான் உடை அணிய வேண்டும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று கட்டுப்படுத்துவதற்கு இவர்கள் யார்?

**6. உள்நாட்டுப் பாதுகாப்பு!**

நக்ஸலைட்டுகள், பிரிவினைவாதிகளுக்கு எதிரான கொள்கைகளை இதுவரை அறிவிக்கவில்லை. தெளிவான கொள்கை அறிவிக்கப்படாத வரை தீவிரவாதமும் பிரிவினைவாதமும் குறையாது.

**7. அயல்நாட்டுக் கொள்கை!**

பிரிவினைவாதிகள் பாகிஸ்தான் தூதரைச் சந்தித்ததால் பேச்சுவார்த்தை இரத்து என்கிறார்கள். பாகிஸ்தான் தூதரைப் பிரிவினைவாதிகள் சந்தித்துப் பேசுவது வழக்கமான ஒன்று. அதை நாம் கண்காணிக்கிறோம். ஆனால், சந்திப்பதைத் தடுப்பது கிடையாது. அப்படிச் சந்திக்கக் கூடாது என்றால் பாகிஸ்தான் ஜனாதிபதி வந்திருக்கும்போதே அவரிடம், "உங்கள் தூதர் பிரிவினைவாதிகளைச் சந்திக்கக் கூடாது என்று சொல்லியிருக்க வேண்டும். சீன ஜனாதிபதியை ஊஞ்சலில் வைத்து ஆட்டி, நலங்குதான் வைக்கவில்லை. அவர் ஊஞ்சல் ஆடிக்கொண்டு இருக்கும்போதே ஆயிரம் சீனத் துருப்புகள் இந்திய எல்லைக்குள் ஊடுருவுகின்றன. இவை எல்லாம் என்ன அயலுறவுக் கொள்கைகள்?

**8. தமிழக மீனவர்கள் பிரச்சினை!**

நாங்கள், இலங்கை அரசு பிடித்து வைத்த தமிழக மீனவர்களையும் படகுகளையும் மீட்டு வந்தோம். ஆனால், இப்போது படகைத் தரமாட்டேன் என்று ராஜபக்ஷ பேட்டி அளிக்கிறார். ராஜபக்ஷவோடு நம்முடைய பிரதமர் பேசினாரா? பாதுகாப்புத் துறைக்கு, தனியாக இரண்டே வாரத்தில் அமைச்சர் போடப்படும் என்று அந்தப் பொறுப்பைக் கவனிக்கும் அருண் ஜெட்லி சொன்னார். இப்போது 130 நாட்கள் கடந்துவிட்டன. நாட்டின் பாதுகாப்புத் துறைக்கே அமைச்சர் இல்லாத அவலம்.

**9. பொருளாதாரச் சீர்திருத்தங்கள்!**

பழைய கொள்கைகளை பத்தாம்பசலித்தனமாகக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்தால் பொருளாதார வளர்ச்சி எப்படி எட்டு சதவிகிதத்தை எட்டும்? தேவையான பொருளாதாரச் சீர்திருத்தங்களை உடனே செய்ய வேண்டும்.

**10. சாதி - மதவாதம்!**

சாதி மதத்தின் அடிப்படையில் இந்தியாவைப் பிளவுபடுத்த பி.ஜே.பி-க்குப் பின்னால் ஒளிந்துகொண்டு 54 அமைப்புகள் செயற்படுகின்றன. ஆட்சிக்கு வந்த பிறகு, நான்கு மாதங்களில் உத்தரப்பிரதேசத்தில் மட்டும் 600 இடங்களில் மதக்கலவரம். மதவெறியைத் தூண்டுகிறவர்களைக் கண்டித்து பிரதமர் ஒரு வார்த்தைகூட பேசவில்லை என்று 10 குற்றச்சாட்டுகளை அடுக்கினார் ப.சிதம்பரம்.

பொயின்ட்களை எடுத்து வைப்பதில் ப.சி-க்கு நிகர் யார்?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## இமயம் தொட...

எங்கே செல்கிறாய் நில்
உன் கடமைகளைச் செய்
மென்மையென்பதற்கப்பால்
மேன்மையொன்று உண்டு
அன்னை என்பதே
உன் அடையாளம்
அதில் அன்பு என்பதே
முதல் பொருளாக
நில்! செய்!
நீ தாயாக...!

மாவை. நா.கஜேந்திரன்

## மாற்றம் எப்போது?

குடியிருந்த நிலமும் இல்லை
குதூகலித்த இந்த வாழ்வுமில்லை- நம்
குறைகள் சொல்ல யாருமில்லை- அவை
தீர்த்து வைக்க வழியுமில்லை!
அரசியல்வாதிகளின் மனதில்
மாற்றமில்லை-இதனால்
அபிவிருத்தியும் எமக்கு இல்லை!
அனர்த்தங்கள் குறையவில்லை-அதனால்
ஆணைக்குழுக்களுக்கும் குறைவில்லை
காணாமற் போனோரும்
திரும்பி வரவில்லை-இனி
அழுவதற்கு கண்ணீரும் இல்லை!
களியாட்டங்களுக்கு
குறைவுமில்லை- இதனால்
கல்வியில் மாணவர்கள் நாட்டமுமில்லை!
அகதி என்ற வார்த்தை மாறவுமில்லை- எம்
வாழ்வுதனில் உயர்வுமில்லை!
இனி எப்போது...

அருமை அன்பு
கொற்றையூர்

## எம்மவர் சாதனைகள்

காப்பெற் வீதியில் காற்றால் பறப்பதும்
சாகசம் என்ற பெயரில் சாவை
அருகில் அழைப்பதும்
நாளொரு கொலையும்
பொழுதொரு விபத்துமாய்
பள்ளியெழும் எம்மவர் சாதனை
வாள்வெட்டு கோஷ்டி மோதல் என்று
சினிமாப் பாணியில்
சிநேகிதர்களின் கூத்து
ஆவா, டில்லு என்று வகை
வகையாய் குழு மோதல்
காலை எழுந்தவுடன் பேஸ்புக்
பின்பு கனிவு கொடுக்கும் நல்ல டுவிட்டர்
மாலைமுழுவதும் சட்டிங் என்று
வழக்கப்படுத்திவிட்ட எம்மவர்...
இப்படி இன்னும் எத்தனையோ
அளவற்ற சாதனைகள்

அ.நளினாசினி
கோண்டாவில்

## வாழ்வில் குறையொன்றுமில்லை

காலங்கள் சென்றாலும்
கானங்கள் கரைவதில்லை
காற்றினிலே உதைத்தாலும்
சிறகுகள் சுமையில்லை
நிமிடங்கள் சென்றாலும்
நினைவுகள் அழிவதில்லை
கால்கள் ஓய்ந்தாலும்
பயணங்கள் ஓய்வதில்லை
துயரங்கள் சூழ்ந்தாலும்
வானம் தூரமில்லை- பிறர்
சாபங்கள் இட்டாலும்
சத்தியங்கள் தோற்பதில்லை
துடிக்கின்ற இதயங்கள் - தவளும்
துயரங்கள் களைவதற்கு
தோல்விகள் கண்டாலும்
முயற்சிகளை நான் விடுவதில்லை
காலனைக்கண்டாலும்
கல்வியை நான் விடுவதில்லை
என் உடம்பில் உயிர் உள்ளவரை
நான் உயர்ந்தவனாய் திகழ்ந்திடுவேன்

அ.அச்சுதன்
யா/இ.க.

## பாதையும் முள்ளும்...

வீரமாய் நடைபோடு
உன் பாதையில்
விபரீதமான விபத்துக்கள்
விழித்திருக்கும்...!
கவனமெடு
அதிவேகம் ஆபத்தின்
ஏற்பாடாய் இருக்கலாம்
முட்களை
முத்தமிடக் காத்திருக்கும்
உன் கால்களுக்கு
சொல்லிவை...
வலியிலிருந்து
வலிமை பிறப்பது
உண்மையென்று

கவிஞர்
த.பருத்திதாசன்

# மௌனத்தின் தேடல்- 222



## தமிழே அமுது

தமிழாள் தமிழை மொழியாக்கி
அறிவாள் அறிவை தனதாக்கி
விளக்காள் விளக்கிட மா எடுத்து
தையலாள் கையால் கோலமிட்டு
கொண்டாள் கொண்டவன் முகம்பார்த்து
விழியாள் விழியால் கதைபேசி
மெலியாள் மொழிந்தாள்
தமிழே அமுதென்று



உடுவிலூர்
சண்கனக சரவணன்

## மாறாத உள்ளங்கள்

பூர்வீக நிலத்தில் புள்ளிக் கோலமிட
பாவையர் எடுத்து சென்ற மாவும்
இரையாச்சு எறும்புக்கு
போராட்டங்களும் இந்த
உண்ணாவிரதங்களும் செவிடன்
காதில் ஊதிய சங்காச்சு
போட்ட வழக்குக்கும்
வளையாத உள்ளங்கள்
விட்டபாடில்லை மீளக்குடியமர

அராலியூர்
சோ.சிவகுமாரன்

## நலம் பெறட்டும் ஞாலம்

மௌனத்தின் தேடலுக்காய்
மௌனமாய்(நல்)
மனையாள் போடும்
இம்மனைக் கோலத்தால்
நம்நாடும் உலகும்
நலம் பெறட்டும்

சி.கருணாகரன்
அரியாலை

## கலாசாரம் காப்பவளோ

வைகறையில் துயிலெழுந்து
நீராடி மனை வாசலில்
மெழுகி கோலமிட்டு பூச்சூடி
பொட்டு வைத்து
சேலை தாவணியில்
இனம் காட்டி மேல்நாட்டு
மோகம் வளரும் வேளை
வழிவந்தோர் காத்த
இன கலாசாரம்
வழிதவறாது காக்கும்
பெண்ணிவளோ!

ம.திருவரசுராசா
வவுனியா

## புத்துயிர்

மாவெடுத்து மனையின் முன்னே
கோலமிடும் எம்மரபு
மலையேறி போய்விட்டது என
கலங்கி நின்ற வேளையில்
மங்கையே உன் செயல்
புத்துயிர் அளித்தது
எமக்கல்ல... எம்கலை மரபுக்கு

த.மோகனரூபன்
யா/ விக்டோறியா கல்லூரி

## எண்ணக்குமரி

வறுமையின் போதும்
தன் மனத்தை புனிதப்படுத்தி
வர்ணப் பொருட்களால்
முற்றத்தை அலங்கரிக்கும்
வண்ணக் கன்னிக் குமரிகளின்
எண்ணமுமேதோ...?

புதுக்கோட்டையன்
யா/செ.இ.கல்லூரி

## இன்றைய புதுமைப்பெண்

பெண்ணே! இன்றைய பண்பாட்டின்
புதுமைப்பெண் நீயடி
காலமாற்றத்திலும் இன்றைய
பெண்கள் ஆடை மாற்றத்திலும்
கோலம் தீட்டும்
குலமகளே ஆச்சரிக்கிறேன்!!!

பருத்தியூர், வி.கோபிதாஸ்

## கலாசாரம்

குடிசை வீட்டிலும் குலமகளான மங்கை
உயிரினங்களுக்காய் மண்ணில்
உட்கார்ந்துள்ளாய்
உன் மனதையே மண்ணில்
போடுவதாய் எண்ணமோ உனக்கு!

இ.லக்ஷி

## சிறைக்கோலம் இது

மஞ்சள் முகம் காட்டி
மாக்கோலம் போட்டு
காலைக்கதிரவனை
வரவேற்றிடும்
தமிழ்க்குலமகளே!
தமிழரின்
சிறைவாழ்வை
சித்திரிக்கும் கோலமோ- இது

தமிழ்த்தோழி
இரா.ஜெயரூா

## அழகுக்கோலம்

தங்கநிகர் மங்கையிவள்
மனைவிளங்க அழகாக
வண்ணப்பட்டுடுத்தி
மங்களமாய் நாம் வாழ
வாழும் மனையின் முன்
வண்ணக்கோலமிட்டு
தமிழர் பண்பாட்டை
மெருகூட்டி நிற்கின்றாள்

துரை, தென்மட்டுவில்

## காலமாற்றம்

அதிகாலை கண்விழித்து
வாசலிலே
அழகுக்கோலம் போட்டு
உறவுகளை அன்பாக உபசரித்தது
அந்தக்காலம்
வீட்டிலே வெட்டியாய் இருந்து
விடியவிடிய பேஸ்புக் பார்த்து
வீண்ஜம்பம் அடிப்பது இந்தக்காலம்

யோ.காண்டீபன், மானிப்பாய்

# மௌனத்தின் தேடல் -223



அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 01.10.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.


குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல் ஒரு

# இனப்படுகொலை



### ஐ.நாவில் பாலஸ்தீனம் கண்டனம்

(நியூயோர்க்)

காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல் ஒரு இனப்படுகொலை என ஐ.நா.சபையில் பாலஸ்தீனம் கண்டனம் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தில் ஹமாஸ் தீவிரவாதிகள் ஆதிக்கத்தில் உள்ள காஸா முனை மீது இஸ்ரேல் இராணுவம தாக்குதல் நடத்தியது. பதிலுக்கு இஸ்ரேல் மீது காஸா தீவிரவாதிகள் ரொக்கெட் வீசி தாக்குதல் நடத்தினர்.

50 நாட்கள் நடந்த போரில் 2 ஆயிரத்து 100 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். 73 இஸ்ரேலியர்கள் பலியாகினர் தற்போது பேச்சுவார்ததையின் மூலம் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் பாலஸ்தீன ஜனாதிபதி முகமது அப்பாஸ் நேற்று முன்தினம் உரையாற்றினார். அப்போது அவர் காஸா மீது தாக்குதல் நடத்திய இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா மீது கடும் கண்டனம் தெரிவித்தார்.

கூட்டத்தில் பாலஸ்தீன ஜனாதிபதி முகமது அப்பாஸ் தெரிவிக்கையில்,

காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல் இதற்கு முன் நடந்த போரை விட அதிக அளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. மேலும் கடந்த போரை விட தற்போது போர்க்குற்றம் இழைக்கப்பட்டுள்ளது

போரின்போது நடந்த நிகழ்வுகளை உலகம் முழுவதிலுமுள்ள அனைத்து கண்களும் பார்த்தன, காதுகளும் கேட்டன. கடந்த 1967 ஆம் ஆண்டில் பாலஸ்தீனத்தின் கிழக்கு ஜெருசலேம் பகுதிகளை போர் மூலம் இஸ்ரேல் கைப்பற்றியது.

தற்போது பாலஸ்தீனத்தின் காஸா மீது நடந்த போர் இஸ்ரேல் நடத்திய இனப்படுகொலையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். அவரது பேச்சுக்கு இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் அவிக்டோர் விபர்டின் கண்டனம் தெரிவித்துள்ளார். அவரது பேச்சு முழுவதும் பொய்யினால் தயாரிக்கப்பட்ட உரை என்றார். அவரது பேச்சுக்கு அமெரிக்காவும் கண்டனம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

# கோரத்தாண்டவம்

## ஒரு வாரத்திற்குள் 100 பேர் கொலை

### 12 பேர் தலை துண்டிப்பு

ஆப்கானிஸ்தானின் கிழக்கு பகுதியில் ஒரே வாரத்தில் 100 பேரை தலிபான் தீவிரவாதிகள் கொலை செய்துள்ளனர். இதில் 12 பேரின் தலையைத் துண்டித்து கோரத் தாண்டவம் ஆடியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருந்த அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினர் விலகத் தொடங்கியதைத்து தலிபான்களின் வன்முறை வெறியாட்டம் அதிகரித்துள்ளது. குறிப்பாக கிழக்கு ஆப்கானிஸ்தானில் அவர்களின் வன்முறை கட்டுக் கடங்காமல் போய்விட்டது. பாதுகாப்பு படையினருடன் தொடர்ந்து போரிட்டு வருகின்றனர்.

காந்தகார், ஹெல் மாண்ட் மற்றும் லோகர் மாகாணங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பின்னர், சமீப காலமாக கிழக்கு பகுதியிலுள்ள காஸ்னி மாகாணம் அர்ஜிஸ்தான் மாவட்டத்தில் தொடர் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். அப்போது 4 கிராமங்களில் புகுந்து 12 பேரின் தலையை துண்டித்து கொலை செய்ததாக துணை ஆளுநர் முகமது அலி அகமதி தெரிவித்தார்.


கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 80 முதல் 100 பேரை அவர்கள் படுகொலை செய்திருக்கலாம். நூற்றுக்கணக்கான தலிபான்கள் பாதுகாப்பு படையினருடன் தொடர் ந்து சண்டையிட்டு வருகின்றனர். சுமார் 70 வீடுகளுக்கு தீ வைத்துள்ளனர். இதுபற்றி பாதுகாப்பு படையினரிடம் இருந்து தகவல்களைக் கூட பெற முடியவில்லை. அர்ஜிஸதான் மாவட்டத்தின நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது. தீவிரவாதிகளை ஒடுக்க, கூடுதல் படைகளை அனுப்பியிருப்பதாக மத்திய அரசு தெரிவத்துள்ளது என்றும் துணை ஆளுநர் மேலும் தெரிவித்தார். (இ)




## சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். மீது

# ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து

# அமெரிக்கா அதிரடித் தாக்குதல்



### ரஷ்யா கடும் கண்டனம்

சிரியாவில் 'ஐ.எஸ்.ஐ.எஸ்.' தீவிரவாதிகளின் இஸ்லாமிய தேசம் பகுதியில் அமெரிக்க போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்து வருகின்றன. அமெரிக்காவுக்கு ஆதரவாக பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகளின் போர் விமானங்களும் குண்டு வச்சில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில் ஐரோப்பிய யூனியனில் உள்ள பெல்ஜியம், டென்மார்க் ஆகிய நாடுகளும் அமெரிக்காவுக்கு ஆதரவு தெரிவித்தன. நேற்று முன்தினமும் நேற்றும் அந்த நாடுகள் போர் விமானங்களை அனுப்பியது. அவை சிரியாவில் உள்ள ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகளின் நிலைகள் மீது சரமாரியாக குண்டு வீசி தாக்கின. அமெரிக்காவின் போர் விமானங்கள் மற்றும் டிரோன்ஸ் (ஆளில்லா விமானங்களும்) குண்டு வீசு தாக்குதலில் ஈடுபட்டன.

அதில் டெர் எல்ஷோர் மாகாணத்தில் தீவிரவாதிகளின் புல நிலைகள் அழிக்கப்பட்டன. தீவிரவாதிகளின் 4 டாங்குகள் அழிக்கப்பட்டன, வடக்கு சிரியாவில் கோபானி நகரில் குர்தீஷ் படை வீரர்கள் தீவிரவாதிகளின் நிலைகளின மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அங்கு கடும் மோதல் நிலவுகிறது. இங்குள்ள மலைப் பகுதியில் தீவிரவாதிகளுடன் கடும் துப்பாக்கி சண்டையில் ஈடுபட்டுள்ளனர். ஈராக்கில் அமெரிக்க படைகள் 7 இடங்களில் குண்டு வீசியன. அதில் ஆயுத வாகனங்கள் அழிக்கப்பட்டன.

ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது அமெரிக்கா நடத்தும் தாக்குதலுக்கு மத்திய கிழக்கு உட்பட 40 நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

அமெரிக்கா கூட்டணி நாடுகளின் இந்த தாக்குதலுக்கு ரஷ்யா கண்டனம் தெரிவித்துள்ளது. ஐ.நா. சபை கூட்டத்தில் ரஷய வெளியுறவு அமைச்சர் கெர்ஜி லாவ்ரோவ் உரையாற்றுகையில்,

சிரியா தீவிரவாதிகள் மீதான தாக்குதல் சர்வதேச சட்டத்துக்கு புறம்பானது. ஏனெனில் அவர்கள் மீது தாககுதல் நடத்த அமெரிக்க கூட்டணி நாடுகள் சிரியாவிடம அனுமதி பெறவில்லை. அவர்கள் தீவிரவாதிகளை அழிக்க சிரியாவிடம் ஒத்ழைப்பு கோர வேண்டுமே தவிர தன்னிச்சையாக தாக்குதல் நடத்தக் கூடாது எனத் தெரிவித்தார்.(இ)

## மோடிக்கு அமெரிக்காவில் உற்சாக வரவேற்பு




ஐந்து நாட்கள் பயணமாக அமெரிக்கா சென்ற இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு, அங்கு வாழும் இந்திய வம்சாவழியினர் 'மோடி மோடி' என கோஷம் எழுப்பி உற்சாக வரவேற்பு அளித்தனர். பிரதமர் பதவி ஏற்ற பின்னர் முதல் முறையாக நரேந்திர மோடி அமெரிக்கா பயணம் மேற்கொண்டுள்ளார்.

2002 ஆம் ஆண்டு குஜராத் இனக் கலவரங்களைத் தொடர்ந்து அமெரிக்கா மோடிக்கு விசா கொடுக்க மறுத்து வந்தது. ஆனால், அவர் பிரதமராக அமர்ந்த பின்னர் அமெரிக்கா சிவப்பு கம்பளம் விரித்துள்ளது. வேறு எந்த ஒரு உலகத் தலைவரின் வருகையும் ஏற்படுத்தாத பரபரப்பை மோடியின் அமெரிக்க பயணம் ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா சென்ற பிரதமர் மோடி, கறுப்பு, மரூன் கலர் கொண்ட உடையை அணி ந்து வந்தார். அவரை அமெரிக்காவிலுள்ள இந்திய வம்சாவழி சமுதாயத்தினர் மோடிமோடி என கோஷம் எழுப்பி உற் சாகமாக வரவேற்றனர். (இ)

## சிகரெட் விற்பனையை தடுத்த அதிகாரிக்கு நடந்த விபரீதம்




சீனாவில் சிகரெட் விற்பனையை ஆதரித்து வைக்கப்பட்ட விளம்பரத்தை நீக்க உத்தரவிட்ட சுகாதார அதிகாரியை ஆடு வெட்டும் மிகப் பெரிய கத்தியால் வெட்ட முயன்ற சிகரெட் கடைக்காரரால் அந்த பகுதி யில் பெரும் பதற றம் ஏற்பட்டது. சீனா வில் உள்ள போசன என்ற பகுதியில் 43 வயதுடைய போ நி என்ற சுகாதார அதிகாரி அங்கிருந்த சிகரெட் கடையில் இருந்த சிகரெட் விளம்பரத்தை நீக்க உத்தரவிட்டார். ஆனால் அதற்கு கடைக்காரர் மறுப்பு தெரிவிக்கவே, உடனே சுகா தார அதிகாரி தனது அதிகாரிகளிடம் அந்தகடையை இழு த்து மூடி சீல் வைக்க உத்தர விட்டார். இதனால் கடும் கோபமடைந்த சிகரெட் கடைக்காரர், கடைக்கு பின்னால் வைத்திருந்த ஆடு வெட்டும் மிகப்பெரிய கத்தியை எடுத்துக் கொண்டு சுகாதார அதிகாரியின் கழுத்தை வெட்ட முயன்றார். உடனே அதிர்ச்சி அடைந்த சுகாதார அதிகாரி, உயிரை கையில் பிடித்துக் கொண்டு [illegible] சிகரெட் கடைக்காரர் அவரை கத்தியுடன் விரட்டி சென்றார்.

இந்த அதிர்ச்சி காட்சியை அங்கிருந்த சிலர் புகைப்படம் எடுத்தனர். இதுகுறித்து தகவல் அறிந்த பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, துப்பாக்கியால் மூன்று முறை மேல் நோக்கி சுட்டு, கடைக்காரரை கைது செய்தனர். கடைக்காரர் மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டு, தற்போது சிறையில் வைக்கப்பட்டுள்ளார.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக கூறப்படுகிறது. (இ)

## 8 இராணுவ வீரர்கள் கைது

மெக்சிக்கோவின் தென் பகுதியில் டிலா ட்லயா என்ற இடம் உள்ளது. அங்கு கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதி ராணுவ வீரர்கள் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு வந்த ஒரு வன்முறைக்கும்பல், இராணுவ வீரர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டது. உடனே இராணுவ வீரர் களும் தகுந்த பதிலடி கொடு த்தனர். ஆனால் அவர்கள் நட த்திய கண்மூடித்தனமான தாக்குதலில் வன்முறைக் கும்பலை சேர்ந்த 21 ஆண்கள், ஒரு பெண் என 22 பேர் கொல்லப்பட்டனர். இந்த மோதல் சம்பவம், அங்கு பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர், இராணுவத்திடம் வன்முறை கும்பல் சரண் அடைய வந்ததாகவும், ஆனால் இராணுவத்தினர் அதை கண்டுகொள்ளாமல், அவர்களை சுட்டுக்கொனறதாகவும் பத்திரிகை ஒன்றில் பேட்டி அளித்தார். இது பற்றி விசாரணை நடத்தப்பட்டது

இந்த நிலையில், துப்பாககிச்சூடு சம்பவத்தில் தொடர்புடைய இராணுவ வீரர்கள் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவ அமைச்சகம் வெளியட்ட செய்திக்குறிப்பு கூறுகிறது.

மெக்சிக்கோவில் கும்பல் வன்முறை தலை தூக்கி வருவதும், கடந்த 2007ஆம் ஆண்டில் இருந்து இதுவரை ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தை விட்டு மு.கா.வெளியேற்றம்!

## ஹக்கீம் கவனம்

அரசாங்கத்தை விட்டு வெளியேறுவது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக அரசாங்கம் கொள்கைகளில் மாற்றம் செய்யாவிட்டால ஆளும் கட்சிக்கான ஆதரவினை வாபஸ் பெற்றுக்கொள்ள ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கவனம் செலுத்தி வருகின்றது.

ஊவா மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் அடைந்த தோல்வி அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமை போன்ற காரணிகளின் அடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸ் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

அரசாங்கத்தை விட்டு விலக வேண்டுமென கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தலைமைத்துவத்திற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சியுடன் இணைந்திருப்பதா இல்லையா என்பது குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் குறித்து ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

உரிய பதில் கிடைக்காவிட்டால் மாற்று வழியொன்றைத் தேடிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

அரசாங்கம் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது என்பதனை புரிந்துகொள்ள வேண்டும்.

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படாத நிலைமையில் அரசியல் ரீதியான தீர்வு ஒன்றை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

கட்சி தொடர்ந்தும் காத்திருப்பதில் அர்த்தமில்லை.

நாட்டில் பிரச்சினைகள் கிடையாது என எவருக்கும் சொல்ல முடியாது.

பிரச்சினை இல்லாவிட்டால் 30 ஆண்டுகால போர் இடம்பெற்றிருக்காது.

பிரச்சினைகளுக்கு அரசாங்கம் துரித கதியில் தீர்வுத் திட்டங்களை முன்வைக்க வேண்டும்.

அரசாங்கத்தின் வேகமான பயணத்தை மக்கள் நிராகரித்துள்ளனர்.

மக்களின் மனோநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என ஹசன் அலி மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## சர்வதேச அணுசக்தி அதிகாரசபை தலைவராக இலங்கையர் தெரிவு

ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் சர்வதேச அணுசக்தி அதிகார சபைத் தலைவராக இலங்கையர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


சர்வதேச நாடுகளின் அணு ஆயுத உற்பத்திகளை கண்காணித்தல், அணுப் பரம்பல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அணுகுண்டு சோதனைகளை தடுத்தல் என்பன இந்த அதிகார சபையின் பொறுப்புகளாகும்.

உலகின் 162 நாடுகள் இந்த அதிகார சபையின் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளன.

இந்நிலையில் இந்த அதிகார சபையின் புதிய தலைவராக வியன்னாவில் உள்ள ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி அப்துல் அஸீஸ் தெரிவாகியுள்ளார்.

இதன் மூலம் ஐ.நா.வின் கீழுள்ள சர்வதேச அமைப்பொன்றின் தலைவராக தெரிவாகிய முதலாவது இலங்கையர்என்ற பெருமையை இவர் பெறுகின்றார. (இ)

## சக்கர நாற்காலிகள் வழங்கல்



(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாற்றுத்திறனாளி களுக்கு சமூக சேவை அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் சக்கர நாற்காலிகளை அண்மையில் வழங்கினார்.

இதன்போது கரவெட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் இச் சக்கர நாற்காலிகளுக்கு என தெரிவு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு விரைவில் சக்கர நாற்காலிகள் வழங்கப் பட்வுள்ளது என கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறிதெரிவித்துள்ளார்.

மேலும் கரவெட்டி பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள உடுப்பிட்டியை சேர்ந்த எஸ்.ரதிசந்திரா எனும் மாற்றுத் திறனாளி ஒருவருக்கு சுய தொழிலுக்காக ஆடு வளர்ப்புக்கு 25 ஆயிரம் ரூபா காசோலை யினை அண் மையில் கரவெட்டிப் பிரதேச செயலர் வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ

## பாடசாலைக்கு சுற்றுமதில் அமைப்பு


(கரணவாய்)

யாழ். கரணவாய் இமையாணன் அ. த. க. பாடசாலைக்கு பழைய மாணவர் சங்கத்தின் சுவிஸ் கிளை யின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட சுற்றுமதில் பூரணப்படுத்தப்பட்டதையடுத்து நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு விசேட நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் எஸ். நந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன் போது வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தலைவர் எஸ். வசந்த குமார் தலைமையில் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட சுமார் 90 மாணவர்களுக்கு காலணிகள் வழங்கப் படவுள்ளன. (இ-60)

## நீதிமன்றத்தின் அழைப்பாணையை மோடியிடம் கொடுத்தால் 6 லட்சம்



பிரதமர் நரேந்திரமோடி 5 நாட்கள்சுற்றுப்பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். இந்த நிலையில் கடந்த 2002ஆம் ஆண்டில் குஜராத் கலவரம் தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் நியூயோர்க் தெற்கு மாவட்ட நீதிமன்றம் நரேந்திர மோடிக்கு அழைப்பாணை வழங்கியுள்ளது.

அமெரிக்கா சென்றுள்ள மோடி ஜனாதிபதி ஒபாமாவை சந்திக்கிறார். மேலும் அமெரிக்க வாழ் இந் தியர்கள் அளிக்கும் வரவேற்பு உட்பட 2 நாட்கள் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

அப்போது பிரதமர் நரேந்திர மோடியின் கையில் நீதிமன்ற அழைப்பாணை கொடுப்பவருக்கு ரூ.6 இலட்சம் பரிசு தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க நீதிமையம் (ஏ.ஜே.சி) என்ற அமைப்பு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மேலும், மோடியிடம் சம்மன் வழங்குபவர் அதற்கான புகைப்படம் மற்றும் வீடியோ ஆதாரங்களை வழங்க வேண்டும். அழைப்பாணை 10 அடி தூரத்தில் இருந்தபடியோ, அல்லது அங்கிருந்து அவர் அருகே வீசி எறிந்து வழங்குபவர் இந்த பரிசு தொகையை பெற தகுதி உடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை அமெரிக்க நீதிமைய அமைப்பின் நியூயோர்க் சட்ட ஆலோசகர் குர்பத்வந்த்சிங் பன்னுன் தெரிவித்துள்ளார்.

ஆனால் அந்த அமைப்பின் தலைவர் ஜோசப் விட்டிங்டன் கூறும் போது அழைப்பாணையை மோடியிடம் வழங்குவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. அதை வழங்கிவிட்டால் 2002ஆம் ஆண்டு நடந்த குஜராத் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களின் வெற்றி அடையாளமாக கருதப்படும்.

இதற்கிடையே, பிரதமர் நரேந்திரமோடியிடம் யாரும் அழைப்பாணை வழங்க அனுமதிக்க முடியாது என மத்திய வெளியுறவு துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியுறவு துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் சையது அக்பருத்தீன் கூறும் போது இந்திய பிரதிநிதி (பிரதமர் நரேந்திர மோடி) பாதுகாப்பு வளையத்துக்குள் இருக்கிறார். எனவே அவரிடம் யாரும் எந்தவித அழைப்பாணை வழங்க முடியாது. அந்த கேள்விக்கே இடமில்லை. இந்த பிரச்சினையை அரசு கையாண்டு வருகிறது என்றார். (இ)

## மின்னலுக்கு மூவர் பலி !

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று முன்தினம் காலை முதல் கனமழை பெய்தது. இடி மின்னலுடன் இந்த மழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதியில் மழை நீர் தேங்கி நின்றது. இருப்பினும் நேற்று முன்தினம் மாலை மழை சிறிது நேரம் ஓய்ந்து இருந்தது.

அப்போது திருச்சுழி அருகே உள்ள பனிக்குறிப்பு கிராமத்தைச் சேர்ந்த பெத்தான் மகள் வளர்மதி (வயது25), ராமர் மகள் வீரலட்சுமி (வயது 18) ஆகியோர் வயலில் களை எடுக்க சென்றனர். அவர்கள் வயலின்களை எடுத்து கொண்டு இருந்தனர். அப்போது மீண்டும் மழை பெய்ய தொடங்கியது.

இடிமின்னலுடன் மழை அதிகமாக பெய்ததால் வளர்மதியும், வீரலட்சுமியும் களை பறிப்பதை நிறுத்தி விட்டு மழையில் நனைவதை தவிர்க்க அருகில் இருந்த பனை மரத்துக்கு அடியில் ஒதுங்கினர்.

அப்போது திடீரென மின்னல் அவர்களை தாக்கியதில் 2 பேரும் சம்பவ இடத்திலேயே உடல் கருகி இறந்தனர்.

இதேவேளை சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஊராட்சி ஒன்றியம் ஆழிமதுரையை சேர்ந்த சேதுராமு மகன் தொல்விஜய்பாலா (15). இவர் பரமக்குடியில் உள்ள தனியார் பள்ளியில் 9ஆம் ஆண்டு படித்து வந்தார்.

நேற்றுமுன்தினம் இந்த பகுதியில் மழை பெய்து கொண்டிருந்தது. ஆடு மேய்க்க சென்ற இவர் மாலை 5.30 மணி வரை வீடு திரும்பாததால் அவரது பெற்றோர் தேடி சென்றபோது முகம் கருகிய நிலையில் இறந்து கிடந்தார். மின்னல் தாக்கி இறந்திருக்கலாம் என இளையான்குடி பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## புகலிடக்கோரிக்கையாளர்களை நட்டாற்றிலே விட்ட அவுஸ். அரசு

### மொரீசனின் ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பும் வலுக்கிறது

அவுஸ்திரேலியாவில் மிகவும் பரபரப்பையும் சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பான ஒப்பந்தம் நேற்று முன்தினம் அந்நாட்டு குடிவரவு அமைச்சர் மொரிசனினால் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் முதல் கட்டமாக கம்போடியாவக்கு 40 மில்லியன் டொலர்கள் வழங்கப்படவுள்ளதாகவும் மேலும் 4 வருடங்களுக்கு அகதிகளை பராமரிப்பதற்கான பணத்தையும் வழங்குவதாக மொரிசன் தெரிவித்துள்ளார் .

முதற்கட்டமாக கம்போடியா அரசாங்கத்துக்கு 22 மில்லியன் பவுன்சையும் 35 மில்லியன் அவுஸ்திரேலியா டொலரையும் வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் கம்போடியா தலைநகரமான ஃப்நாம் பெந் ல் [Phnom Penh] மொரிசனினால் கைச்சாத்திடப்பட்டுள்ளது.இந்த நடவடிக்கைக்கு மனித வுரிமை அமைப்புக்கள்மற்றும் அகதி செயற்பாட்டாளர்கள கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ள னர்.

இதற்கு மொரிசன், அரசின் கொள்கை இது எனவும் சட்ட விரோதமான முறையில் படகுகள் மூலம் வந்து புகலிடம் கோருவோருக்கு அவுஸ்திரேலியாவில் இடம் இல்லை என்பதை கூறி மொரிசன் விவாதித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அரசியல், சினிமா
பொழுதுபோக்கு கேள்விகளை
சுருக்கமாக பெயர், முகவரி
குறிப்பிட்டு அனுப்பி
வையுங்கள்,




வியாசர் பதில்கள்
இல. 3, 2 ஒழுங்கை
பிறவுண் வீதி ,
யாழ்ப்பாணம்.

குறுந்தகவல் (SMS)
021 567 1532

Email
vijasarpathil@gmail.com



## ஈ அடிச்சான் கொப்பி என்கிறார்களே அது எப்படி?

**Hi** வியாசர்

ரம்சிகா, கரணவாய்

உங்களுக்கு சூரியாவைப் பிடிக்குமா?

ஓ! ரெம்பவே பிடிக்கும். அவர் இல்லையென்றால் இந்த உலகம் இயங்காது, மழை பொழியாது, மரம் இருக்காது, காற்றடிக்காது, ஏன் யாருக்கும் உணவுகூட கிடைக்காது. அதுசரி நீங்கள் சூரியபகவானைத்தானே கேட்டீர்கள்.

அன்பின் வியாசர் அவர்களே!

வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி

மனித மனதிற்கு அதிக பலத்தைக் கொடுப்பது தங்கமா? வெள்ளியா?

இரண்டும் அதிக பலத்தை அல்ல பயத்தைத்தான் தரும் (வைத்திருப்பவர்களுக்கு மட்டும்)

வியாசர் மாஸ்டர் !

மனோகரன், யாழ்ப்பாணம்

ஈ அடிச்சான் கொப்பி என்கிறார்களே அது எப்படி?

அதை மாணவர்களிடம் கேட்டால் மிக விரிவாகச் சொல்வார்கள். ஆனால் சமீப காலமாக ஈ இற்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. மாணவர்களையும் தாண்டி வேறு துறைக்கும் ஈ அடிக்கும் பழக்கம் ஏற்பட்டு விட்டதுதான் அதன் காரணமோ!

வியாசர் ஐயா!

எஸ்.திருவானந்தம், மாதகல்

உங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்?

யாருக்காகவும் என் வழியை மாற்றுவேன். எதற்காகவும் மற்றவரை என் வழிக்கு மாற்றமாட்டேன்.

வியாசரே!

அரு.கனகராசா, சாவகச்சேரி

நீங்கள் திருமணமாகாதவராய் இருந்தால் வியாபாரியின் மகளையா? விலாசமானவரின் மகளையா தேர்ந்தெடுப்பீர்?

வியாபாரியின் மகளும் வேண்டாம், விலாசமானவரின் மகளும் வேண்டாம். ஒரு விவசாயியின் மகளே போதும். ஏனென்றால் உலகத்துக்குச் சோறு போடும் மனம் அவளிடம் தானே இருக்கும்.

**Hi** வியாசர்!

த.மோகனரூபன், சுழிபுரம்

கற்பில் சிறந்தவள் கண்ணகியா? இல்லை சீதையா?

தன் கற்பின் மகிமையால் மதுரை மாநகரையே எரித்தாள் கண்ணகி.

தன் கற்பின் மகிமையால் அரக்க குணம் கொண்ட இராவணின் கற்பை உலகறியச் செய்தவள் சீதை. நீங்களே முடிவெடுங்கள் பார்க்கலாம்.

## இந்தக் காலத்து பெண்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்,

அன்பின் வியாசர் அண்ணா!

துஷாந்தினி, உடுப்பிட்டி

தொலைபேசியை கண்டுபிடிச்சவன் என் கையில் கிடைச்சா பச்சை மட்டையால் அடிப்பேன். நீங்க என்ன செய்வீங்க?

"காணாததைக் கண்டவன் காடுமேடெல்லாம் கொண்டு திரிவானாம்" என்று நம்மூர் பழமொழி ஒன்று உண்டு. அப்படிப்பட்டவனுக்கு அந்தப் பச்சை மட்டை வைத்தியத்தைக் கொடுக்கலாமே. கிரஹம்பெல் பாவம் அவரை விட்டுவிடுங்கள்.

வியாசர் அவர்களே!

கௌரீசன், அல்வாய்

இந்தக் காலத்து பெண்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்,

போகின்ற போக்கைப் பார்த்தால் ஆணடிமைக்கெதிரான இயக்கங்கள் ஆரம்பிக்கும் சமிக்ஞைகள் தென்படுகின்றதை போல தெரிகின்றதே.

வணக்கம் வியா!

அபி, கரணவாய்

தெய்வ சிந்தனை ஒருவனிடத்தில் எப்போது ஏற்படுகின்றது?

ஒருவனுக்கு துன்பம் எப்போது வருகிறதோ. அப்போது அவன எவ்வளவு நாஸ்தீகனாக இருந்தாலும் "கடவுளே உனக்கு கண் இல்லையா" என தனைமறந்து மனம் நோவான். துன்பம் கடவுளை நினைக்கச் செய்கிறது.

## இஞ்சிதின்ற குரங்காகலாமோ?

வனப்புறு வனிதை தன்னை
வாலிபர் கண்டு விட்டால்
தனக்கவள் கிடைப்பாளென்று
தாம் மனக்கோட்டை கட்டி

தினம் தினம் அவள் பின்னால் ஏகி
தின்பண்டங்கள் பலதும் தந்து
மனதினில் அவளை எண்ணி
மதியதும் மயங்கிச் செல்ல

அனைத்தையும் அவள் அபகரித்து
அநாதையாய் அவனை விட்டுவிட்டு
கணத்தினில் கனடா மாப்பிள்ளையை
கைபிடித்து மறைந்து போக
மனதினை பறி கொடுத்தான்

மந்திபோல் திரிதல் கண்டீர்
ஈழமாம் இலங்கை நாட்டின்
எழில் தனைக் கண்ட நாட்டார்
அளப்பெரும் கடன் வசதிநல்கி

அழியா நன்கொடைகள் ஈந்து
பளபளப்பான பாதைகள் பலவும் போட்டு
பளிங்கு மா மண்டபங்கள் கட்டி
வளம் பெற வாழ்வழித்துப் பின்னே

வடிவழகியைக் கைபிடிக்க கண்டு
களம்பல கண்ட எங்கள்
கண்கவர் இந்தியாவும்
அழகுடை ஈழநாட்டை

அந்நியன் அபகரிக்க
குளமெனக் கண்ணீர் மல்க
கூனிப்போய் குனிந்து நிற்க
வளமிழந்த தமிழர் வாழ்வுக்கு
வாய்க்கரிசி இடுவார் யாரோ!

மு.திருநாவுக்கரசு,
விகடகவி

# சிங்களக் குடும்பங்களின் ஆக்கிரமிப்பு குறித்து கூட்டமைப்பிடம் முறையிட்டனர் தமிழர்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலந்தமடு, பெரியமாதவனை ஆகிய பகுதிகளுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நேரடியாக சென்று பார்வையிட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மயிலத்தமடு, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பெரியமாதவனை ஆகய பகுதிகள் கால்நடைகளில் மேய்ச்சல் தரைக்கென ஒதுக்கப்பட்ட பகுதியாகும். இங்கு கடந்த 1970 ஆம் ஆணடு முற்பட்ட காலம் தொடக்கம் செங்கலடி, சித்தாண்டி, வந்தாறுமூலை, முறக்கொட்டாஞ்சேனை, கிரான், சந்திவெளி, கோரகல்லிமடு உட்பட்ட பல பகுதிகளை சேர்ந்த கால் நடை வளர்ப்பாளர்கள் இங்கு சென்று தமது கால்நடைகளை மேய்ச்சலுக்கு விட்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த 2011ஆம் ஆண்டு தொடக்கம் அதன் எல்லைப் பகுதியான அம்பாறை மாவட்டத்தில் ஆயிரத்து 200க்கு மேற்பட்ட சிங்கள குடும்பத்தினர் மட்டக்களப்பு மாவட்டத்தின் இக் கால்நடைக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் அத்துமீறி பிரவேசித்து பல ஆயிரக் கணக்கான நிலப் பரப்பில் தமது பயிர் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

கால்நடைகள் அப்பகுதிக்கு செல்லும் போது அவற்றை வெட்டியும், கால் நடைகளினால் ஏற்பட்ட நட்டங்களுக்கு நட்டஈடு கேட்டும் பல வழிகளில் துன்புறுத்தி வருகின்றனர்.

இவ்விடயமாக தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசியல்வாதிகள் சிங்கள மக்களின் அத்துமீறிய குடியிருப்பை தடை செய்து வெளியேற்றுமாறு அரசாங்கத்திற்கு அறிவுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவ ட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான கி.துரைராசசிங்கம், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா.நடராசா ஆகியோர மயிலந்தமடு, பெரியமாதவனை ஆகிய பகுதிகளுக்கு சென்றதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையான மாந்தலையாறு எல்லை பகுதி மட்டும் சென்று பார்வையிட்டனர்.

அங்கு அத்துமீறி குடியிருப்பவர்களை நேரடியாக கண்காணித்தனர்.

அத்துடன் இவர்கள் இராணுவ பொறுப்பதிகாரியை சந்தித்து அங்கு கால்நடைகளை வளர்க்கும் தமிழ் கால்நடை உரிமையாளர்கள் பாதுகாப்பு, அவர்களது கால்நடைகளின் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடினர்.

நாளை திங்கட்கிழமை மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம் மட்டக்களப்பில் நடைபெற உள்ள நிலையில் இவ்விஜயம் முக்கிய மானதாக உள்ளது.

அத்துமீறி குடியிருக்கும் அம் பாறை மாவட்ட சிங்கள விவசாயிகள் சார்பாக வனபரிபாலன திணைக்களம் வழக்கு தொடர்வ தாக கூறும் நிலையில் அங்கு ஆயிரத்து 200க்கு மேற்பட்ட அம்பாறை மாவட்ட சிங்கள குடும்பங்களின் அத்துமீறி குடியிருப்பை இதுவரை வெளியேற்றப் படவில்லை.

பல ஆயிரக்கணக்கான வனபரிபாலன சபைக்குரிய காணிகள் அழிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## யானைகளால் உடைமைகள் சேதம்

நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவில் தொடர்ந்தும் காட்டு யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். சவளக்கடை 6ஆம் காலனி பிரதேசத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மக்கள் குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்த மூன்று காட்டு யானைகள் வீட்டிலிருந்த நெல் மூடைகள், பயிர்கள் மற்றும் உடைமைகளை சேதப்படுத்தியுள்ளது. இப்பிரதேச குடியிருப்புக்களில் வாழும் மக்கள் இரவு நேரங்களில் நாளாந்தம் அச்சத்துடன் வாழ்வதுடன் தூக்கமின்றி குடும்பத்தையும் உடைமைகளையும் பாதுகாக்கும் நிலை உருவாகியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பிரதேச செயலாளர், கிராம சேவை உத்தியோகத்தர், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோரினூடாக வனவிலங்கு பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலும் இரவு நேரங்களில் குடியிருப்புக்குள் நுழையும் காட்டு யானைகளை அதிகாரிகளினால் கட்டுப்படுத்த முடியாதுள்ளதாக பொது மக்கள் அங்கலாய்க்கின்றனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு கடக்கும் மட்டும் அண்ணன் தம்பி.
அதன்பின் நீ யார்? நான் யார்?
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முஸ்லிம் கட்சிகளைச் சந்திப்பதில் கூட்டமைப்பு அவசரம் காட்டக்கூடாது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதென்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறியாமை என்றே கூற வேண்டும்.

இலங்கையில் சிறுபான்மை இனம் என்று கூறக் கூடிய வகுதிக்குள் தமிழ், முஸ்லிம் இனங்களே அடங்கும்.

எனினும் சிறுபான்மை இன மக்களின் உரிமைக்கான போராட்டம் என்பதை தமிழ் மக்களே முன்னெடுத்தனர். இவ்வாறு தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் காரணமாக ஆட்சித்தரப்பு தமிழ் மக்களை விரோதமாக நோக்கியது.

இத்தகைய சூழ்நிலையில் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டிய முஸ்லிம் அரசியல் கட்சிகள் சிங்கள அரசுடன் சேர்ந்து பொறுப்பான அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டன.

சிறுபான்மை இனமாக இருக்கக் கூடிய முஸ்லிம் மக்களின் கட்சிகள் அரச தரப்புடன் இணைந்து கொண்டமை தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு குந்தகமாக அமைந்தது என்ற உண்மையை ஒருபோதும் மறந்து விட முடியாது.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த மிகக் கொடூர யுத்தத்தின் போதெல்லாம் முஸ்லிம் அரசியல் கட்சிகள் மௌனமாக இருந்தன. யுத்தகளத்தில் தமிழ் மக்கள் கொல்லப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்று ஒரு வார்த்தையை யாவது முஸ்லிம் கட்சிகள் சொல்லியிருக்கலாம்.

ஆனால் அவ்வாறு சொல்வதை விடுத்து அரசுக்குச் சார்பாக நடந்து கொள்வதிலேயே முஸ்லிம் கட்சிகள் ஆர்வம் காட்டின. இது மட்டுமன்றி நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தனக்கு இருக்கக் கூடிய அதிகாரங்களைப் பயன்படுத்தி, விசாரணை இன்றி சிறைகளில் அடைபட்டுக் கிடக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால் அவர் அதனைக்கூடச் செய்ய வில்லை.

தமிழ் மக்களின் போராட்ட காலத்தில் அரசாங்கத்துடன் சேர்ந்து தமது நலன்களைக் கவனிக்கும் தந்திரோபாயத்தைக் கையாண்ட முஸ்லிம் அரசியல் கட்சிகளை இப்போது அரசாங்கம் ஓரம் கட்டத் தலைப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், தன்னோடு சேர்ந்து நிற்கும் முஸ்லிம் கட்சிகளைப்புறம் தள்ளவேண்டுமென அரசு முடிவு செய்துள்ளது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டால்-சிறுபான்மை இனமாகிய தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் முடிவுறுத்தப்பட்டால் அது சிறுபான்மை இனமாகிய முஸ்லிம் மக்களையும் பாதிக்கும் என்ற உண்மையை முஸ்லிம் தரப்பினர் உணர மறந்ததன் விளைவே இன்றைய நிலைமை எனலாம்.

தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டம் நடத்தி அழிந்து போக, நாங்கள் அரசாங்கத்தோடு சேர்ந்து பெரும்பான்மை இனத்திற்கும் உள்ளித் தைலம் வைக்கலாம் என்று நினைத்த முஸ்லிம் கட்சிகளுக்கு இப்போது அரசும் பெரும்பான்மை இன அமைப்புகளும் பாடம் கற்பிக்கின்றன.

இதன் விளைவாக பள்ளிவாசல்கள் தாக்கப்படும் சம்பவங்களும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்மங்களும் நடந்தேறுவதைக் காணமுடியும்.

முஸ்லிம் அரசியல் கட்சிகளின் கூடத்தலைவர்களுக்கு எதிராக முஸ்லிம் மக்களே போர்க்கொடி தூக்கும் அளவில் நிலைமை உள்ளது.

இதன் காரணமாக அரசாங்கத்துடன் இணைந்திருப்பதில் இருந்து முழுமையாக விலகுவது, அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்வது என்ற முடிவுகளை எடுத்து, அரசுக்கு எதிராகப் போராட வேண்டிய கட்டாயத்தில் முஸ்லிம் கட்சிகள் இருக்கின்றன.

இச் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சுவார்த்தை நடத்துவதானது அரசையும் முஸ்லிம் காங்கிரஸையும் மீளவும் ஒற்றுமைப்படுத்தும் முயற்சியாகவே அமையும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசியல் இராஜதந்திர புத்தி இருக்குமாயின் அரசுக்கும் முஸ்லிம் கட்சிகளுக்கும் இடையிலான முறுகல் நிலை முற்றிப் பழுக்கும் வரை பொறுத்திருக்க வேண்டும்.

இதிலிருந்து சொல்லிவிட்டதென்பதற்காக அவசர அவசரமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திக்க வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது.

எங்களுக்கு ஏற்பட்ட அழிவுகளின்போதெல்லாம் எந்த அவசரமும் காட்டாத இந்தியாவின் கருத்தைக் கேட்டு அவசரமாக முஸ்லிம் காங்கிரஸைச் சந்திப்பது அவ்வளவு நல்லதல்ல.

எங்கள் பிரச்சினைகளுக்கான தீர்வில் நடக்கக்கூடிய நகர்வுகள் பற்றி ஆராய்ந்த பின்னர், தேவையாயின் முஸ்லிம் அரசியல் கட்சிகளுடன் பேசலாம். இதுவே பொருத்தமானமுடிவாகும்.

# ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குழம்பிப் போயிருக்கிறார்-சம்பந்தன்

## தீர்வை வழங்க சர்வதேசம் முயற்சிக்கிறது

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குழம்பிப் போயிருக்கிறார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை. சேனாதிராசா மற்றும் செயலாளர் கி.துரைராசசிங்கம் ஆகியோரை வரவேற்கும் நிகழ்வு மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள துளசி மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பொருளாதார சமூக கலாசார உரிமைகள் சம்பந்தமாக, மனித உரிமைகள் சம்பந்தமாக, மக்களுடைய பாதுகாப்பு சம்பந்தமாக சர்வதேச ரீதியில் இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. இதனை எவரும் மறுக்க முடியாது.

எங்களுடைய கலாசாரம், பாரம்பரியம், மரபுகள் போன்றவற்றுக்கு மாறாக நிலைமைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவற்றை சர்வதேச சமூகம் மாற்றியமைத்து, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக தற்போது ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற பாதையில் நாங்கள் முன்னேறுவதற்கு அனைவரும் உதவ வேண்டும்.

இதுபற்றி ஜனாதிபதி. சர்வதேசத்திடம் கூறியிருக்கின்றார். ஆனாலும் அதனுடைய விளக்கத்தை அவர் கூறவில்லை.

ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள பல விடயங்கள் மீறியதன் காரணமாகத்தான், இலங்கை அரசுக்கு எதிரான பிரேரணை ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக தெளிவு வரவேண்டியது அவசியம்.

ஐக்கிய நாடுகள் பிரேரணையின் அடிப்படையில், இலங்கை அரசு ஏற்றுக் கொண்ட பல விடயங்களிலிருந்து தற்போது அதிலிருந்து விலகி வேறு வழியில் முயற்சிக்கின்றார்கள் என கருதப்படுகின்றது.

சமீபகாலத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறுகையில், இந்த நாட்டில் சிறுபான்மையினம் என்று எவரும் இல்லை. இந்த நாட்டில் வாழுகின்ற மக்கள் ஒரே மக்கள் ஆனால், ஒரு வித்தியாசம்தான் இருக்கின்றது.

இந்த நாட்டை நேசிப்பவர்கள், நாட்டை நேசிக்காதவர்கள் என இரண்டு பிரிவினர்கள்தான் உள்ளார்கள். இந்த வேற்றுமையைத்தவிர வேறு வேற்றுமைகள் எதுவும் இங்கு இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில், இலங்கை நாட்டில் வெவ்வேறு மக்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் ஒவ்வொரு வருக்கும் தங்களது தனித்துவத்தைப் பேணுவதற்கும் உரிமையுண்டு என குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்கள் ஒவ்வொருவரும் அவர்கள் அனைவரும் அவர்களது தனித்துவத்தைப் பேணுவதற்கு உரிமையுண்டு. அந்த அடிப்படையில் இந்த நாட்டில் ஆட்சிஅமைய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், சமீப காலமாக சிறுபான்மையினம் இந்த நாட்டில் இல்லை என கூறிய ஜனாதிபதி, இந்த நாட்டில் பெரும்பான்மையினம் இல்லை என்று சொல்லவில்லை.

இந்த நாட்டு ஜனாதிபதி பாரதப் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கின்றார். இதில் எங்களுடைய விடயம் சம்பந்தமாகவும் பேசப்படும்.

அரசியல் தீர்வு காணாமல் வடக்கு, கிழக்கில் பெரிதளவில் இராணுவத்தினரைக் குடியேற்றி, பெரும்பான்மையினத்தவர்களைக் குடியேற்றி அவர்களுக்கு ஏற்ற வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது.

ஆனால், தமிழ் மக்கள் புனர்வாழ்வு இல்லாமல் குடியிருக்க இடம் இல்லாமல் வாழவேண்டிய நிலை ஏற்பட்டால் இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு பிரச்சினைகளுக்குத் தீர்வு என்ற விடயம் இல்லாமல் போய்விடும்.

துரதிஸ்டவசமாக நாங்கள் கிழக்கு மாகாணசபையைக் கைப்பற்றவில்லை. இதனை நாங்கள் செய்திருக்கலாம் ஆனால்நாங்கள் செய்யத்தவறிவிட்டோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய ரீதியில் பலம் பெற்றிருக்கின்றது. தற்போது முக்கியமான காலகட்டத்தில் இருக்கின்றோம். எதிர்காலத்தில் முக்கிய தீர்வை நோக்கவுள்ளோம் எதிர்வரும் காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறலாம்.

எமது மக்களின் போராட்டம் நியாயமான போராட்டம், இதற்கு நீதி வழங்கப்பட வேண்டும். இதனை அங்கீகரிக்க வேண்டும் என சர்வதேச சமூகம் முயற்சிக்கின்றது.


ஆனால், தீர்வு காணப்படாமல் அதை தொடர முடியாது என நாங்கள் நிரூபிக்க வேண்டும். எமது மக்கள் தமது சாத்வீகப் போராட்டத்தில் மூலமாக நிரூபிக்க வேண்டும். இவற்றை வருகின்ற தேர்தலில் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எவ்வாறு பலப்படுத்தலாம் என்ற சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். சாத்வீகப் போராட்டம் நடைபெறுகின்ற போது கட்சி ரீதியாகப் பலப்படுத்தப்படல் வேண்டும். எமது முஸ்லிம் சகோதரர்கள் இணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு பலரது ஆதரவுகளையும் பெற்றுக்கொள்கின்றபோது சர்வதேசத்தின் ஆதரவும் பலமும் அதிகரிக்கும். ஆனால், தற்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குழம்பிப் போயிருக்கின்றார் என அவர் தெரிவித்தார். (செ-11)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### எங்கள் குருநாதன்



ஆதியந்த மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
அதுவேநீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சோதிமய மென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்
சுட்டிறந்து நில்லென்றா னெங்கள்குரு நாதன்
சாதி சமயமில்லா னெங்கள்குரு நாதன்
தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன்
வாதியருங் காணவொண்ணா னெங்கள்குரு நாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தா னெங்கள்குரு நாதன்.


# உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாமல் நேர்மையாய் இருப்போம்

நமது இன்றைய சிந்தனைக்காக பைபிள் பகுதியில் இயேசு அன்று சொன்ன அந்த உவமையை திரும்பிப் பார்ப்போம். ஒரு மனிதருக்கு இரு புதல்வர்கள் இருந்தார்கள். அவர் மூத்தவனிடம் போய், மகனே, நீ இன்று திராட்சைத் தோட்டத்திற்குச் சென்று வேலை செய்" என்றார். அவன் மறுமொழியாக, நான் போக விரும்பவில்லை" என்றான். ஆனால்

### பரமபிதா காட்டிய பாதை

பிறகு தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டுபோய்வேலை செய்தான். அவர் அடுத்த மகனிடமும் போய் அப்படியே சொன்னார். அவன் மறுமொழியாக, நான் போகிறேன் ஐயா" என்றான் ஆனால் போகவில்லை. இவ்விருவருள் எவர் தந்தையின் விருப்பப்படி செயற் பட்டவர்?"என்று இயேசு கேட்டார். அவர்கள் 'மூத்தவரே" என்று விடையளித்தனர். 'வரிதண்டுவோரும் விலைமகளிரும் உங்களுக்கு முன்பாகவே இறையாட்சிக்கு உட்படுவர் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். ஏனெனில் யோவான் நீதி நெறியைக் காட்ட உங்களிடம் வந்தார். நீங்களோ அவரை நம்பவில்லை. மாறாக வரி தண்டுவோரும் விலைமகளிரும் அவரை நம்பினர். அவர்களைப் பார்த்த பின்பும் நீங்கள் உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ளவுமில்லை.அவரை நம்பவுமில்லை" என்றார்.

'நான் போகிறேன் ஐயா" என்று பணிவோடு, ஆனால் உள்ளத்தில் வேறு எண்ணங்களோடு பேசிய அந்த மகனை நினைத்துப் பார்க்கும்போது, 'உள்ளொன்று வைத்து, புறமொன்று பேசும்" பலரை நினைக்கத் தூண்டுகிறது. இப்படித் தேனொழுகப் பேசிய ஒரு சிலரை நம்பி நாம் சென்றபோது, சோதனைகளையும் வேதனைகளையும் எமக்கு சொத்தாக தந்தவர்கள் பலர். எனவே வாய் வார்த்தைகளால் உறுதி தந்துவிட்டு, பின்னர் ஒன்றும் செய்யாமல் நம் முற்றவர்களை ஏமாற்றியிருந்த இறைவனிடமும், நம்மால் பாதிக்கப்பட்டவர்களிடமும் மன்னிப்பு கேட்பது இன்று பொருத்தமாக இருக்கும். 'உள்ளொன்று வைத்து, புறமொன்று பேசாமல், நேர்மையாய், உண்மையாய், அன்பாய் நடந்து கொள்வோம்.



இந்த இரு மகன்களும் நடந்து கொண்ட முறையை ஒரு கதையாகச் சொன்ன இயேசு நமக்கும் ஒரு பாடம் புகட்டுகிறார். அதாவது, கடவுளின் திருவுளம் என்னவென்று அறிந்த

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

பிறகும் நாம் அதை நிறைவேற்றாமல் போய்விடுகிறோம். இது சரியல்ல என்பது இயேசுவின் போதனை. எனவே கடவுளுக்கு ஏற்ற வாழ்க்கை முறையை நாம் வாழுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலிங்க இல்லை சமாளிக்குமா இலங்கை

லசித் மலிங்க என்னும் பெயர் சர்வதேச கிரிக்கெட்டில் அனை வராலும் அறியப்பட்ட ஓர் நாமம்.

எதிரணி துடுப்பாட்ட வீரர்களை தன் வேகத்தால் மிரட்டும் ஓர் வேகப்பந்துவீச்சாளர்.

சர்வதேச கிரிக்கெட்டில் பல சாதனைகளுக்கும் சொந்தக்காரர் ஆவார்.

இலங்கையின் 18 வருட உலக கிண்ண கனவை தனது தலைமையின் கீழ் வென்று தந்தவர்.

50 ஓவர்கள் கிரிக்கெட் இருபது-20 கிரிக்கெட் ஆகிய இருவகையான கிரிக்கெட் போட்டிக்கும் இலங்கை அணியின் துருப்புச் சீட்டாக திகழ்பவர்.

சர்வதேச கிரிக்கெட்டில் ஜோக்கர் ஸ்பெசலிஸ் என அனைவராலும் அழைக்கப்படும்இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வேகப் பந்துவீச்சாளர் லசித் மலிங்க ஆவார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டியில் மலிங்க மூன்று முறை ஹெட்ரிக் சாதனை நிகழ்த்தியுள்ளார்.

2007 ஆம் ஆண்டு உலக கிண்ண கிரிக்கெட்டில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக இரட்டை ஹெட்ரிக் (தொடர்ந்து 4 விக்கெட்) எடுத்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு உலக கிண்ண கிரிக்கெட்டில் கென்னியாவுக்கு எதிராகவும் அதே ஆண்டில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இலங்கையில் வைத்து ஹெட்ரிக் சாதனை புரிந்துள்ளார்.

சர்வதேச அரங்கில் மூன்று முறை ஹெட்ரிக் மற்றும் இரட்டை ஹெட்ரிக் எடுத்த ஒரே ஒரு வீரர் இவராவார்.

அண்மையில் கணுக்காலில் ஏற்பட்ட உபாதைக்கு அறுவை சிகிச்சை செய்வதற்காக லசித் மலிங்க தற்போது அவுஸ்திரேலியாசென்றுள்ளார்.

இதனால் சுமார் நான்கு மாதங்கள் விளையாட்டிலிருந்து ஓய்வு பெற வேண்டிய நிலைக்கு மலிங்க தள்ளப் பட்டுள்ளார்.

மலிங்கவுக்கு ஏற்பட்ட உபாதையானது இலங்கை கிரிக்கெட் அணிக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

2004 ஆம் ஆண்டில் சர்வதேச கிரிக்கெட் உலகிற்கு அறிமுகமான லசித் மலிங்க முழங்காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக 2011 ஆம் ஆண்டு டெஸ்ட் விளையாட்டுப் போட்டியிலிருந்து ஓய்வு பெற்றார்.



போட்டிகளின் இறுதிக்கட்டங்களிலும் இக்கட்டான சூழ் நிலையிலும் எதிரணியை தன் வேகத்தால் மிரட்டி ஓட்டங்களை விட்டுக்கொடுக்காமல் எதிரணியை தன் கட்டுக்குள் வைத்திருப்பதில் வல்லவராவார். அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் உலக கிண்ண கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில் நடைபெறவுள்ளது.

அதற்காக சர்வதேச அரங்கில் அனைத்து நாடுகளும் தங்கள் அணியை தற்போதே தயார் படுத்தி வருகின்றன.

இலங்கை அணியும் அடுத்த உலககிண்ண போட்டிக்கான தங்கள் அணியை தயார்படுத்தும் வேளையில் மலிங்கவுக்கு ஏற்பட்ட உபாதையானது பெரிய சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சூழ்நிலையில் லசித் மலிங்க உலக கிண்ண போட்டிகளுக்கு தயாராக முடியுமா? என்ற சந்தேகம் உள்ளதாக கிரிக்கெட் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மலிங்க சிகிச்சை பெற்ற வைத்தியர் டேவிட்யங் தெரிவித்ததாவது,

மலிங்க உலக கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு முன் தயாராகி விடுவார் எனவும் உலக கிண்ண பயிற்சி போட்டியில் அவர் பங்கேற்க முடியும் எனவும்உலக கிண்ண போட்டியில் மலிங்க விளையாடுவதை தாம் விரும்புவதாகவும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் மலிங்க தெரிவிக்கையில், நீண்ட நாள் உபாதைக்கு முற்றுப்புள்ளி வைக்கவே சிகிச்சை மேற்கொள்வதாகவும் சத்திர சிகிச்சையில் எவ்வித பிரச்சினையும் ஏற்படாவிட்டால் ஜனவரி மாத நடுப்பகுதியில் பயிற்சியில் ஈடுபட முடியும் எனவும் தன்னால் உலகக் கிண்ணத்திற்கு முன்னர் சரியான முறையில் தயார் செய்ய முடியும் என நம்பிக்கை வெளியிட்டார் மற்றும் இன்னும் ஒரு பந்து வீச்சா ளரை இந்தக் காலப்பகுதிக்குள் தயார் செய்ய முடியும் எனவும் அது அணிக்கு நன்மை தரும் எனவும் அவர் தெரிவித்து ள்ளார்.

உபாதையில் இருந்து மீண்டும் வரும் மலிங்க குறுகிய காலப்பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டு தன்னை உலக கிண்ண போட்டிக்கு தயார் படுத்த முடியுமா? அக்குறுகிய காலப்பகுதியில் மலிங்க தன் முழுத் திறமையுடன் பரிபூரணமாக பந்து வீச முடியுமா?என்ற கேள்வியே ஏற்பட்டுள்ளது.

எது எப்படியாயினும்மலிங்க இல்லை என்றால் சமாளிக்குமா இலங்கை என்ற நிலைமையே உள்ளது.

க.மதீசன்

## பண்டத்தரிப்பு அறிவொளி வி.க. தாச்சி இறுதிப் போட்டி இன்று

(மானிப்பாய்)

பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழகம் நடத்திய தாச்சி இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இப் போட்டிகளின் இறுதிப் போட்டியில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகமும் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

முன்னதாக இடம்பெற்ற அரையிறுதிப் போட்டிகளின் படி தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகமும் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகமும் மோதியது. ஆரம்பம் முதலே சுதாகரித்து ஆடிய ஆலடி சிந்து விளை யாட்டுக் கழகம் 9:4 என்னும் பழங்கள் அடிப்படையில் இலகுவாய் வென்று இறுதிக்கு தகுதி பெற்றது.

மற்றைய அரையிறுதி போட்டியில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகமும் மயிலிட்டி கண்ணகி விளை யாட்டுக் கழகமும் மோதியது. இப் போட்டியில் ஆரம்பம் முதலே கட்டுக்குள் வைத்திருந்த பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் 12:4 என்னும் பழங்கள் அடிப்படையில் இலகுவாய் வென்றது.

இறுதிப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வலி மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி.நா.ஐங்கரன், தாச்சி சங்கத்தலைவர் செ.சண்முகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

(கு 23)

## அளவெட்டி மத்திய வி.கழகம் நடத்தும் வடமாகாண ரீதியான மென்பந்தாட்டம்

## காமாட்சி -கார்மேல்போஸ் இன்று பலப்பரீட்சை



அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்குதெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கொக்குவில் காமாட்சி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழகம் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவுக்கு...

சிறைத் தண்டனையுடன் ரூபாய் 100 கோடி அபராதம் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடை பெற்று வந்த இந்த வழக்கில் தீர்ப்பையும் தண்டனையும் நீதிபதி ஜோன் மைக்கல் குன்ஹா நேற்று மாலை அறிவித்தார்.

வழக்கில் ஜெயலலிதாவுடன் குற்றம் சாட் டப்பட்டிருந்த அவருடைய தோழி சசிகலா, சசிகலாவின் உறவினர்களான இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோரும் குற்றவாளி களாக தீர்ப்பளிக்கப்பட்டு 4 ஆண்டுகள் சிறைத தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு 10 கோடி ரூபாய் அபராத மும் விதிக்கப்பட்டுள்ளது. அபராதத் தொகையை செலுத்தத் தவறின் மேலும் ஒரு வருடம் நால் வரும் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும்.

கடந்த 1996-ம் ஆண்டு ஜூன் 16 ஆம் திகதி சென்னை செசன்சு நீதிமன்றில் சுப் பிரமணியசுவாமி (தற்போது பா.ஜனதா மூத்த தலைவர்) ஒரு புகார் மனு தாக்கல் செய்தார். அதில், 1991-ம் ஆண்டு முதல் 1996-ம் ஆண்டு வரை தமிழக முதல் அமைச்சராக பதவியில் இருந்த காலத்தில் ஜெயலலிதா வருமானத்திற்கு அதிகமாக சொத்துகளை வாங்கி குவித்ததாகவும், அதனால் ஜெயல லிதா மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது.

இதுகுறித்து விசாரணை நடத்தி அறி க்கை தாக்கல் செய்யும்படி 27.6.1996 ஆம் திகதி தமிழக இலஞ்ச ஒழிப்பு பிரிவு பொலி ஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

விசாரணை அதிகாரியின் உத்தரவின் பேரில் 18.9.1996 ஆம் திகதி ஜெயலலிதா மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதைத் தொடர் ந்து மறுநாள் ஜெயலலிதாவுக்கு சொந்தமான வீடுகளில் சோதனை செய்யப்பட்டன. சசி கலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் வீடுக ளிலும் பொலிஸார் சோதனை நடத்தினர்.

இந்த வழக்கில் 7.12.1996 ஆம் திகதி அன்று ஜெயலலிதா கைது செய்யப்பட்டார். அவர் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து அவரது வட்டில் இலஞ்ச ஒழிப்பு பொலிஸார் சோதனை நடத்தினர்.

19 வாகனங்கள், 7,109 சேலைகள், 389 ஜோடி செருப்பு, 214 சூட்கேஸ், தங்க- வைர நகைகள், 1,116 கிலோ வெள்ளி பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த பொருட்கள் அனைத்தும் வழக்கில் சேர்க்கப்பட்டன.

ஜெயலலிதா தனது வருமானத்தை விட ரூ.66 கோடியே 64 லட்சத்து 42 ஆயிரத்து 318 (இந்திய மதிப்பில்) மதிப்புள்ள சொத்து க்களை வாங்கி குவித்தார் என்று குற்றம் சாட்டப்பட்டது.

3.1.1997 ஆம் திகதி ஜெயலலிதா பிணை யில் விடுதலை செய்யப்பட்டார். இந்த வழ க்கை விசாரிக்க சென்னையில் தனி நீதி மன்றம் அமைக்கப்பட்டது. அதைத் தொடர் ந்து அந்த நீதிமன்றில் விசாரணை தொட ங்கியது. 19.11.1999 ஆம் திகதி தொடங்கிய விசாரணை 18.7.2001 ஆம் திகதி வரை நடைபெற்றது. மொத்தம் 259 சாட்சிகளின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டன. அவர்க ளிடம் குறுக்கு விசாரணையும் நடத்தப்பட்டது.

இந்த நிலையில் 2001-ம் ஆண்டு தமிழ கத்தில் மீண்டும் ஜெயலலிதா தலைமையில் புதிய ஆட்சி அமைந்தது. அதைத்தொடர்ந்து 79 சாட்சிகளிடம் மறு விசாரணை நடந்தது. இந்த நிலையில் தி.மு.க. பொதுச்செயலாளர் க.அன்பழகன் உயர் நீதிமன்றில் ஒரு மனு தாக்கல் செய்தார். அதில் குற்றம் சாட்டப்பட்டு உள்ளவர்களில் முதல் நபர்(ஜெயலலிதா) முதல் அமைச்சராக பதவி ஏற்றுள்ளதால் இந்த வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்ப ட்டது. அந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அப்போதைய நீதிபதிகள் எஸ்.என்.வரியவா, எச்.கே.சீமா அடங்கிய டிவிஷன் பெஞ்ச், ஜெய லலிதா மீதான சொத்து குவிப்பு வழக்கை கர் நாடக மாநிலத்திற்கு மாற்றி உத்தரவிட்டது.

அதைத்தொடர்ந்து கர்நாடக அரசு 27. 12.2003 ஆம் திகதி அன்று ஜெயலலிதா மீதான சொத்து குவிப்பு வழக்கு விசாரணைக்கு தனிக்கோர்ட்டு அமைத்து உத்தரவிட்டது. ஏ.எஸ்.பச்சாபுரே நீதிபதியாக நியமிக்கப்ப ட்டார். அரசு சிறப்பு வக்கீலாக ஆச்சார்யா நிய மனம் செய்யப்பட்டார்.

2010-ம் ஆண்டு வரை தமிழில் இருந்த வழக்கு ஆவணங்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டன. இந்த வழக்கு தொடர்புடைய ஆவணங்கள் 88 ஆயிரம் பக கங்கள் ஆகும். குற்றப்பத்திரிகை மட்டும் 13 ஆயிரத்து 600 பக்கங்களை கொண்டுள்ளது.

பெங்களூர் தனி நீதிமன்றில் 252 அரசு தரப்பு சாட்சிகளும், 99 எதிர்தரப்பு சாட்சிகளின் வாக்குமூலங்களும் பதிவு செய்யப்பட்டன.

அப்போதைய தனி நீதிமன்று நீதிபதி மல்லிகாரசுனா உத்தரவின் பேரில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா 2011-ம் ஆண்டு ஒக்ரோபர் 20, 21 மற்றும் நவம்பர் 21, 22 ஆகிய திகதிகளில் நேரில் ஆஜராகி வாக்கு மூலம் அளித்தார். அதைத்தொடர்ந்து சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோரிடம் வாக்கு மூலம் பெறப்பட்டது.

அதைத்தொடர்ந்து ஜெயலலிதா தரப்பு வக்கீல் குமார் தனது இறுதி வாதத்தை தொடங்கினார்.

25 நாட்கள் அவர் வாதிட்டு தனது தரப்பு நியாயங்களை எடுத்து வைத்தார். அதைத் தொடர்ந்து சசிகலா சார்பில் வக்கீல் மணி சங்கர் 9 நாட்களும், சுதாகரன் மற்றும் இள வரசி ஆகியோர் சார்பில் வக்கீல் அமித் தேசாய 8 நாட்களும் ஆஜராகி வாதிட்டனர். அரசு சிற ப்பு வக்கீல் பவானிசிங் 15 நாட்கள் இறுதி வாதம் செய்தார். அரசு தரப்பு மற்றும் எதிர் தரப்பு இறுதி வாதம் நிறைவடைந்ததை அடு த்து கடந்த 20-ம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் என்று தனி நீதிமன்று நீதிபதி ஜோன் மைக்கேல் குன்ஹா அறிவித்தார்.

ஆனால் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முதல் நபரான ஜெயலலிதா தமிழக முதல்-அமைச்சராக இருப்பதால் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்றும், பாதுகாப்பு கருதி தனி நீதிமன்றை பெங்க ளூர் பரப்பன அக்ரஹாராவுக்கு மாற்ற வேண்டும் என்றும் ஜெயலலிதா சார்பில் தனிக்கோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட் டது. பெங்களூர் நகர பொலிஸ் கமிஷனர் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய வசதியாக தனி நீதிமன்றை பரப்பன அக்ரஹாராவுக்கு மாற்றுமாறு யோசனை தெரிவித்ததால் நீதிபதி ஜோன் மைக்கேல் குன்ஹா தனி நீதிமன்றை பரப்பன அக்ர ஹாராவுக்கு மாற்றி உத்தரவிட்டார்.

வழக்கு ஆவ ணங்களை மாற்ற வசதியாக வழக்கின் தீர்ப்பை நேற்று செப் ரெம்பர் 27 ஆம் திகதிக்கு தள்ளி வைத்து நீதிபதி உத்தர விட்டார். இந்த வழக்கு விசா ரணை தொடங்கி 18 ஆண்டுகள் ஆகி றது. இதில் கர்நாட கத்தில் மட்டும் 11 ஆண்டுகள் விசாரணை நடைபெற்று உள்ளது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிக ளாக, 1. பச்சாபுரே 2. மனோலி 3. ஆன்ட்ரிக்ஸ் (தற்காலிகம்) 4. மல்லிகார்சுனா 5. சோமராஜ் (தற்காலிகம்) 6. பாலகிருஷ்ணா 7. முடிகவுடர் (தற்காலிகம்) 8. ஜோன் மைக்கேல் குன்ஹா ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா மீதான அனைத்து குற்றச்சாட்டுக்களும் நீதி மன்ற தீர்ப்பின்படி நிரூபிக்கப்பட்டன.

மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்படி ஜெய லலிதா எம்.எல்.ஏ பதவியிலிருந்து தகுதி நீக்கம செய்யப்பட்டு அவரது முதல்வர் பதவி பறிக் கப்பட்டது. தொடர்ந்து ஜெயலலிதாவின் காரில் இருந்த தேசிய கொடியும் அகற்றப்பட்டது.

ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டுகள் சிறை விதிக்கப்பட்டதால் கர்நாடக உயர்நீதிமன்ற த்தில் பிணை மனு செய்ய வேண்டும். ஆனால் கர்நாடக உயர்நீதிமன்றத்திற்கு ஒக்டோபர் 5 வரை தசரா விடுமுறை (நவராத்திரி) என்று அளிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகத்தில் நீதிபதி வீட்டில் அவசர வழ க்கு விசாரிக்கும் நடைமுறையில் இல்லை. தற்போதைய தகவல்படி ஒக்டோபர் 5க்கு பிறகு தான் ஜாமீன் மனு விசாரிக்கப்படலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது.

சொத்துக்குவிப்பு வழக்கில் சேர்க்கப்ப ட்டுள்ள ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேரின் சொத துக்கள் விரைவில் பறிமுதல் செய்யப்படவுள்ளது.

**அடுத்த முதல்வர் யார்?**

சிறை விதிக்கப்பட்டதால் ஜெயலலிதா முதல வர் பதவியை இழந்தார். இதனால் அடுத்த முத ல்வர் யார் என்பதை அதிமுக எம்.எல்.எக்கள் கூடி முடிவு செய்வர். இதில் அதிமுக மூத்த உறுப்பினரும் முன்னாள் நிதியமைச்சரு மான ஓ.பன்னீர்செல்வத்திற்கு வாய்ப்பு அதி கமாக இருப்பதாக கூறப்படுகின்றது.

நான்காண்டுகள் சிறைத் தண்டனை பெற்றுள்ள ஜெயலலிதா இன்னும் இரு பொதுத் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951, பிரிவு 8 (3)ன் படி நீதிமன்றத்தால் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு இரண்டு ஆண்டு களுக்குக் குறையாமல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டால் அவர் குற்றவாளி என்று தர்ப்பளிக்கப்பட்ட அவர் குற்றவாளி என்று தீர்ப்ப ளிக்கப்பட்ட நாள் முதல் தேர்தலில் போட்டி யிட தகுதியை இழந்தவராக ஆகிறார்.

இந்தத் தகுதி இழப்பு அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட நாளிலிருந்து மேலும் 6 ஆண்டுகளுக்கு நீடிக்கும் இது தேர் தல் ஆணையகத்தின் சட்டமாகும்.

ஒரு சட்ட சபை அல்லது மக்களவையில் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும். எனவே 6 ஆண்டு போட்டியிட முடியாது என்றால் இரு பொதுத் தேர்தல்களில் குற்றவாளியால் போட்டியிட முடியாது என்றே அர்த்தம்.

எனவே ஜெயலலிதாவின் தண்டனை காலத்தை தவிர்த்து இப்போதுள்ள சூழ் நிலையை வைத்து பார்த்தாலும் கூட இன்னும் 2 சட்ட மன்றத் தேர்தல்க ளில் ஜெயலலிதாவால் போட்டியிட முடி யாது.

சிறையில் உள்ள ஜெயலலிதா தனக்கு நெஞ்சு வலிப்பதாகவும் மயக்கம் வரு வதாகவும கூறினார். இதையடுத்து அவரு க்கு சிறையில் உள்ள மருத்துவமனையில் மருத்துவ பரிசோத னை செய்யப்பட்டு சிகிச்சையளிக்கப்ப ட்டு வருகின்றது.

காலையில் முத ல்வராக பிரதமருக்கு உரிய பாதுகாப்புடன் தனி விமானத்தில் பயணித்த முன்னாள முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் மாலையில் கர்நாடகாவின் ஆக்ரா சிறைக்கு சிறை வாகனத்தில் சிறை அதிகாரிக ளின் பாதுகாப்பில் சிறைச்சாலை க்கு அனு ப்பி வைக்கப் பட்டார்.

முதல்வர் பதவியை இழந்த ஜெயலலிதா ஜெயராமிற்கு கைதி எண் 7402 வழங்கப் பட்டு இரவு உணவும் சிறைச்சாலையில் வழ ங்கப்பட்டது. சிறையின் வெளியே அதிமுக உறுப்பினர்கள் கண்ணீருடன் காத்திருந்த னர்.

சசிகலாவுக்கு 7403, சுதாகரனுக்கு 7404, இளவரசிக்கு 7405 கைது எண்கள் வழங்கப்பட்டன. (செ-11)

# இலங்கைக்கான...

எகிப்து தலைமையிலான இந்த நாடுகளில் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், கியூபா, இந்தோ னேஸியா, தென் சூடான், சிம்பாப்வே, பங் களாதேஷ, அல்ஜீரியா, பொலிவியா, ஈக்வ டோர உள்ளிட்ட நாடுகள் கூட்டாக இணைந்து இந்தஅறிக்கையை வெளியிட்டுள்ளன.

மொத்தமாக 22 நாடுகள் கையொப்ப மிட்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

எனினும், இதனை ஓர் ராஜதந்திர ரீதி யான வெற்றியாக கருத முடியாது எனவும், நாடு ராஜதந்திர ரீதியில் பாரியளவில் வீழ் ச்சியடைந்துள்ளதாகவும் தயான் ஜயதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாக ஐக் கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு 29 நாடுகள் ஆதரவளித்து வந்த போதிலும் தற்போது வெறும் 7 நாடுகள் மட்டுமே ஆதரவளிக்கின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

22 நாடுகள் கூட்டாக இணைந்து சர்வ தேச விசாரணைகளுக்கு எதிர்ப்பை வெளி யிட்ட போதிலும் அதில் ஏழு நாடுகள் மட்டுமே ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை யில் வாக்களிக்கும் உறுப்புரிமை உடை யவை என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# ஜனாதிபதி...

புலிகளும் உள்ளே வந்தனரா? என்பது தொடர்பாகவும் ஆணைக்குழு மக்களிடம் தீவிரமான விசாரணை நடத்தியிருந்தது.

எனினும் மேற்படி விசாரணைகளின் போது தாம் இடம்பெயர்ந்தமைக்கு காரணம் படையினரின் ஷெல் மற்றும் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களே என மக்கள் குற்றம்சாட்டியதுடன், படையினரின் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் வரும்போது தம்மோடு புலிகள் வரவில்லை. எனவும், புலிகள் தம்மை தடுக்கவில்லை எனவும் மக்கள் கூறியுள்ளனர். (செ-11)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் Dr. துரைராஜா கோபிநாத் (அகத்தியர் கிளினிக்)



எமது அன்புக்குரிய மாண வனும் எமது நண்பனும் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரி மைந்தனுமான கோபி விபத்தினால் மரண மானதையிட்டு அதிர்ச்சியை யும் துக்கத்தினையும் பகிரு கின்றோம்.

அன்னாரது குடும்பத்தவர்க்கு ஆறுதல் கூறுவதுடன் அன்னாரது ஆன்மா சிவனுடன் இரண்டறக்கலந்து சாந்திபெற இறைவனை பணிந்து நிற்கின்றோம்.

சுஜீவா வைத்தியசாலை

Dr.ஜெ.ஜெயலன், Dr.ச.ஜெயலன், Dr.க.இராஜரட்ணம்

(7700)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகரத்தினம் புஷ்பமலர்



மயிலணி வடக்கு, சுன்னாக த்தைப் பிறப்பிடமாகவும், கட்டுவன் வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் புஷ்ப மலர் 26.09.2014 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சரவணை பூரணம் தம்பதிகளின் அன்பு மகளும் கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், விஜய தாஸ் (வலி.வடக்கு பிரதேச சபை), அனுஜா, விஜிதா ஆகியோரின் அன்புத்தாயாரும், இளை யவி-மாதாத்தை தம்பதிகளின் அன்பு மருமகளும், சசிகுமார், சுவர்ணா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு, இந்திராதேவி, கதிர்காமநாதன் மற்றும் கமலாதேவி, புஷ்பவதி, புஷ்பராணி, பாலரஞ்சனா, திரு ஞானசம்பந்தர், ஜெயந்தினி ஆகியோரின் சகோதரியும், கவி, சாருஜன், பர்மினி, சர்வி ஆகியோரின் அன்புப் பேர்த்தி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 11 மணிய ளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்

கட்டுவன் வீதி,
மல்லாகம்.

தகவல்:-குடும்பத்தினர்.

(7699)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மிஸ் பண்ணிடாதீங்க! அப்புறம் வருத்தப்படுவீங்க

இன்னும் 2 நாட்களுக்கு மட்டுமே
பதிவுகளுக்கு முந்துங்கள்

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
தென்னிந்திய தெய்வ தரிசனம்
(கோயில்கள் சுற்றுலாத்தலங்கள் உள்ளடக்கம்)

ஐம்பூத ஸ்தலங்கள், ஆறுபடை வீடுகள், நவக்கிரக கோயில்கள், சீர்காழி சிதம்பரம், மதுரை மீனாட்சி, திருப்பதி உட்பட 40க்கு மேற்பட்ட கோயில்கள் தரிசிக்கலாம். மற்றும் சுற்றுலாத் தலங்களான ஊட்டி, மைசூர், பெங்களூர், மெரினா பீச், அண்ணா, எம்.ஜி.ஆர் நினைவுச் சதுக்கங்கள் ஆகியன பார்வையிடலாம்

சென்னையில் ஒரு நாள் பொருட்கள் கொள்வனவு செய்ய ஒதுக்கப்படும்

உள்ளடக்கப்பட்டவைகள் :
01. இரு வழி விமானக்கட்டணம் (Returan Air Ticket all taxes)
02. உயர் தரத்திலான மூன்று நேர சைவ உணவு, காலை மாலை தேநீர் மற்றும் குளிர்பானம்
03. சுத்தமான குடிநீர் (Mineral Water)
04. குளியலறை இணைந்த தங்குமிட வசதி (Attached Bathroom, Colour Tv)
05. முழு சுற்றுலாவிற்கும் குளிரூட்டப்பட்ட சொகுசு பேருந்து
06. திருப்பதியில் VIP வரிசையில் சென்று சுவாமி தரிசனம் செய்ய ஏற்பாடு செய்து தரப்படும்.
07. இருவழி விமான நிலையத்திற்கான கட்டணம் (Airport Transport Up and Down)

தரிசனம் 15 நாட்கள்
புறப்படும் திகதி 19.10.2014

(சி-8615)

01.10.2014 இற்கு முன்பு பதிவுசெய்யவும்

ik tourism
கருணாகரப்பிள்ளையார் கோயில் வீதி (இளந்தாரி கோவிலடி) இணுவில் கிழக்கு, இணுவில்
T.p: 0771010104

Personal Class-கணினி
*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CS6, CorelDraw X6, PageMaker, Adobe Illustrator, Adobe Indesign)
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்
TP:0779672038 ஆசிரியர்:KRC

## டிப்பர்...

சைக்கிளை பின்னால் சென்ற டிப்பர் வாகனம் முந்திச் செல்ல முற்பட்ட வேளையே இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

இதன்போது டிப்பரின் முன்பக்க பகுதி மோட்டார் சைக்கிளினை மோதியதில் அதில் பயணித்த வைத்தியர் கீழே விழுந்து டிப்பரின் முன் பக்கச் சில்லினுள் அகப்பட்டு தலை நசியுண்ட நிலையில் சம்பவ இடத்தில் துடிதுடித்து உயிரிழந்துள்ளார்.

இதேவேளை டிப்பர் வாகனச் சாரதி இறங்கி தப்பி சென்றதாக அங்கு நின்ற பொதுமக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக யாழ்.பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் சடலத்தை பார்வையிட்டதுடன் யாழ். போதனா வைத்திய சாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பிவைத்தனர். அத்துடன் டிப்பரையும்பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர்.

சந்தேக நபரான டிப்பர்சாரதியை கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் யாழ் பொலிஸார் தெரிவித்தனர். (செ-4-85)

ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2015
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணத்தில்
அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில்
அன்பொளி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

அனுமதிகளை 29.09.2014 திங்கட்கிழமைக்கு முன்னதாக பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

(C-8613) இயக்குநர்கள்

Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள்
சினிமாப் பாடல்களுக்கான Notes விற்பனைக்குண்டு.
கரவீணா இசை மன்றம்
4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
0777031293

## புலமைப்பரிசில்...

யோகபூர்வ இணையத்தளத்தில் குறித்த பெறுபேறுகளைப் பார்வையிட முடியும்.

கடந்த ஒகஸ்ட் 17ம் திகதி இடம்பெற்ற ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைகளுக்காக 3 இலட்சத்து 35ஆயிரத்து585 மாணவர்கள் தோற்றியமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

SPEED LANKA EXPRESS Courier
வெளிநாடுகளுக்கான
தபால் பொதி விநியோக சேவை
(சி-8606)



- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

Speed Lanka Express (Pvt) Ltd.
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net

Diploma in Spoken English



புதிய பிரிவு ஆரம்பம்
04.10.2014 காலை 9.30 மணி
இப்பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில் 9.30 - 12.00
Certificate Level: 3 months
Diploma Level : 6 months
அனுமதிகள் வழங்கப் படுகின்றன
ஆங்கில மொழியைக் கற்பித்துப் பேச வைப்பதில் வட மாகாணத்தில் முதன்மை ஆங்கிலக் கல்லூரி
உலகத்தரம் வாய்ந்த சான்றிதழ்கள்
University of Cambridge (UK) Certificates
CITY & GUILDS (UK) Certificates
E-CITY Diploma in English Certificate
City & Guilds
E-CITY COLLEGE OF ENGLISH
இல.372, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
0773400418/0212217106
(C-8597)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
After A/L What Next???

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

Spoken English With Grammar - Quick Learning Course
- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம். Duration: (1 1/2 Months)
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.

Diploma In English Duration: (2 Months)
தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதினும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

IELTS Acadamic/General We do Official Online Registration for Exam Candidates Duration: (2 Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

We gurantee success rate 6.5 band and above

A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது Duration: (2 Months)

28th Sunday 2014 @ 8.00 am 29th Monday 2014 @ 3.00 pm
30th Tuesday 2014 @ 9.00 am

No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel : 0212224550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207
(C-8612) Hot Lines : 0777585913, 0777222422, 0714299935

மீண்டும் O/L உடன் விரும்பிய நாடு செல்ல
50,000/- வருமானத்துடன் வெளிநாட்டு
ஹொட்டேல் பயிற்சி

SEGi University
UK சான்றிதழ்
பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்று கௌரவமாக தொழில்செய்து உழைக்க
வெற்றிகரமான 8வது அணி

பயிற்சி முடிவில் மலேசியா, சிங்கப்பூர், சுவிஸ், டுபாய் நியூசிலாந்து, அவுஸ்ரேலியா சென்று
இலட்சக்கணக்கில் சம்பாதிக்கலாம்!

3 வருட விசாவுடன் மாதங்களுக்குள் பயணம்
IELTS, வங்கிப்பண வைப்பு இல்லை
வயதெல்லை 35



வெளிநாட்டுப் பிரதிநிதி & சிகரம் பணிப்பாளரை நேரில் சந்தித்து 8வது அணியில் இணைய...

| | |
|---|---|
| யாழ் ஞானம்ஸ் ஹொட்டேல் | ஒக்டோபர் 3 & 10 |
| கிளிநொச்சி சோலைவனம் விடுதி | ஒக்டோபர் 4 & 7 |
| வவுனியா நெல்லி ஸ்ரார் விடுதி | ஒக்டோபர் 4 & 7 |
| மன்னார் RDHS மண்டபம் | ஒக்டோபர் 6 |
| கொழும்பு Omega Inn | ஒக்டோபர் 10 & 11 |

பிரவேசம் முற்றிலும் இலவசம்
முதல் 10 பேருக்கு 50% கழிவு

SIKARAM Education Abroad & Visa Solutions
மேலதிக விபரங்கள் மற்றும் முற்பதிவுகளுக்கு:
www.sikaram.lk
0773 616 798, 021 300 80 60
Sikaram (Pvt) Ltd., No.275-2/1 & 2/2, Clock Tower Road, Jaffna (Behind Jaffna Hospital)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.